
# மனைவியின் நிழல்

தெணியான்



மகேந்திரராஜா மயூரன் நினைவு வெளியீடு

உ கலாமணி பரணிதரன்

EDITOR
JEEVANATHY
KALAI AHAM
ALVAI (N.P.)

# பனையின் நிழல்

தெணியான்

மகேந்திரராஜா மயூரன் நினைவு வெளியீடு
2006

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பனையின் நிழல் |
| வகை | : | குறுநாவல் |
| ஆசிரியர் | : | தெணியான் |
| முகவரி | : | கலையருவி,<br>கரணவாய் வடக்கு,<br>வல்வெட்டித்துறை. |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | : | 13.06.2006. |
| அட்டை ஓவியம் | : | ரமணி |
| வெளியீடு | : | க.மகேந்திரராசா<br>ஸ்ரீமகால்,<br>அல்வாய். |
| அச்சிட்டோர் | : | மதுரன் கிறா(f)பிக்ஸ்,<br>& ஒவ்செற் பிறின்ரேர்ஸ்<br>அல்வாய்.<br>தொ.பே.021 226 3099. |



அழியா நினைவின் தொடரும் நிழல் ஆனான்

## உதிரம் உறைய
## உணர்வலையில் துரும்பாகி...

மயூரன், என் அன்புச் செல்வம்
எப்படி நான்
என் மௌனம் கலைப்பேன்.
வாயடைத்துப் போயல்லவா
இருக்கின்றேன்.

என் பிள்ளைக் கலிதீர்க்கவென்று
பெருவுலகில் வந்துதித்தவன் நீ.
இன்று,
பேசாது நீயுறங்குகின்றாய்
பெருங் கலி கொள்கிறேன் நான்.

பேசித்தான் ஆகவேண்டும்.
பெரும் துன்பங் கண்டு
வாயடைத்துக் கொண்ட போதும்
பேசித்தான் ஆக வேண்டும்
இதுவே நான் பேசுவதற்குத் தருணம்.

உன் அம்மாவை நான்
கரம்பிடித்தபோது
கால் நூற்றாண்டு வயதெனக்கு
உன் அம்மா
வீட்டின் ஏக புதல்வி.
அப்பு ஆச்சி
ஐயா, அம்மா

அண்ணை, தம்பி என
பாசத்திற்குக் குறைவில்லாத
குடும்பம்.
அப்புவின் பிரயாசையில்
வளவுகள் வளம்கொழிக்க
சோலைகள் ஆயிற்று எம் வளவு
நானும் பெரிய மாமாவும்
பராயத் தோழர்கள்
சின்னமாமா எங்கள்
பிள்ளையைப் போல்
அப்பு, ஆச்சி, மாமா, மாமி
வீட்டிற்கு வந்த மருமகன்மீது
பெரும் பாசம் கொள்ள
தாம்பத்தியம் எனக்கினிதாயிற்று.

மாதங்கள் பத்தில்எங்கள் வீட்டில்
இளையகுரல், அது புதிய குரலும்கூட
அதுவே உன் குரல் எழுந்தபோது
குடும்பத்தவர் அடைந்த
ஆனந்தத்திற்கு அளவேயில்லை.
குடும்பம் தளைக்கத்
தலை மகனாய் தரணியிலே
நீயுதித்தாய்.

ஆனாலும் எனக்கொரு
மனக்குறை
உன் மழலையின்பம்
அருகிருந்து நுகரமுடியாதபடி
கொழும்பில் எனக்கு வேலை.
அடிக்கடி பயணம்.
யாழ் கொழும்பு பயணம்

நொடிப்பொழுதாயிற்று
உந்தன் மதலை இன்பம்
மாறுமுன்பே
மனோ, ரதன், ஜனன்
நிசன், சஞ்சி, சர்மிளன்,
என்று என் வீடு
எப்போதுமே கலகலப்பாயிற்று
காலங்கள் எப்போதும்
யாருக்காகவும்
காத்திருப்பதில்லை.
இளைய வாரிசுகள்
வரிசையாக வந்துதித்தபோதும்
முதிர்ந்த உறவுகளும்
ஒன்றன்பின் ஒன்றாய் எமைவிட்டகன்றனர்.
ஆச்சி, மாமி, மாமா, அப்பு என
எமைவிட்டு நீங்கினர்.
பெரிய மாமா
வங்கி உத்தியோகம்
குடும்பம் எனவும் போக
சின்னமாமா
காலத்தின் கட்டாயத்தால்
லண்டன் போய்விட
சுமைகள் எல்லாம் என்தலையில்.
காலத்தின் வளர்ச்சியில்
வாலிபத்தின் வாசலில்
நின்ற நீயும்
என் வேலைகளைப் பகிர்ந்துகொண்டாய்.
எனக்கு நல்லதொரு காவலனாய்
அம்மாவிற்கு மூத்த பெண்பிள்ளையாய்
தம்பியர்க்கும் தங்கைக்கும்
பாசமுள்ள நல் அண்ணாவாய்

உறவுகள், சுற்றத்தார்க்கு
முறைசொல்லி உறவாடும்
சிறு குழந்தையாய்
இது எப்படி
உன்னால் மட்டுமே
ஆக முடிந்தது.

வெளியுலகம் உனக்குப்
புரிந்த போது
உன் மனதினில் தீராத வேட்கை
அம்மாவை அப்பாவை
நல்லபடியாக்க வேண்டும்
ஆசைத் தம்பிகள் விரும்பியதை
அடைய வேண்டும்
அருமைத் தங்கைக்கு
ஆவன செய்யவேண்டும்.
தீராத வேட்கையாய்
கொழுந்து விட்டெரிந்த
உன் ஆசைச் சுவாலைக்கு
சின்னமாமா எண்ணெயிட்டு
கைகொடுக்க
உன் ஆசைக் கனவுகள்
மெய்ப்படலாயிற்று.

கொஞ்சி மகிழ்ந்த
பிஞ்சு முகத்தின் மழலைத்தனம்
மாறாத பிள்ளையை
ஆறாயிரம் மைல்களுக்கப்பால்
அனுப்புகிறோமே என்பது
எனக்கும் அம்மாவுக்கும்
நெஞ்சத்து நெருடல்களானபோதும்

நீ லண்டனில் கால்பதித்தாய்
லண்டனில் உன் கால் பதிந்ததும்
இங்கு
என் குடும்பமும் கால் பதிக்கலாயிற்று
அம்மாவிற்கு விதவிதமாய் நகைகள்
அப்பாவிற்கொரு T.V.S
தம்பிகள் ஆசைப்பட்ட
வசதிகள்
சஞ்சிக்கு பூப்புனிதச் சடங்கு
என்றே எம்வீடு
புதுப் பொலிவுறலாயிற்று.

உன் கனவுகளும் நனவுகளாயிற்று
உனக்கும் உறவுகளுக்கும்
உன்கைகள் விரியலாயிற்று
உறவுகளைக் கண்டு
ஆண்டுகள் ஆறானது
ஊர் வருகிறேன் என்றாய்
ஆலடியான் திருவிழா
சித்திரையோடு வாவென்றேன்.
சித்திரையில் என்பிள்ளை
என்னோடிருப்பான் என்றே
கனவுகண்ட என் நெஞ்சத்தை
உறைய வைத்ததையா
அந்த அதிகாலைச் சேதி.
ஊரே அக்கணத்திலிருந்து
ஆடிப்போயிருந்தது.
உன்னைப் பெற்ற எங்கள்நிலை
சொல்லித் தெரிய வேண்டுமா.
ஏனிந்த அவசரம் ஐயா
எம்மைப் பார்க்கு முன்

அப்பு, ஆச்சி, ஐயா, அம்மாவைப்
பார்க்கும் ஆவலிலா
அவ்விடம் நாடிச் சென்றாய்
உன் தம்பியர் எந்நேரமும்
உன் நினைவில்
நினைவிழந்து வாடுகிறார்
உன் இழப்பையெண்ணித்
தேறமுடியாது தவிக்கின்றார்.
அப்பனுக்கா இக்கதி.
நந்தனாவுக்கேன் இந்நிலை
எண்ணி வருந்துகிறார்
சுற்றத்தார்

எங்கள் குடும்பத்தின்
எல்லாச் சுமைகளையும்
தாங்கியே நடந்தவர் பெரியப்பா.
என் பிள்ளை
உருவத்திலும் குணத்திலும்
என்னைப் போலவே எனச்
சொல்லிச் சொல்லி
ஆனந்தமடைபவர்.
இன்று
உன் பொறுப்பும்
தனக்கே என்றேங்கி
கலங்கி நிற்கிறார்.

அறுபது வருடங்களை
ஆறுவருடங்களுக்குள்
அனுபவித்துவிட்ட சலிப்பா.
இல்லை.
இவர்க்கிது போதுமென்ற

நினைப்பா.
இல்லை
இன்பத்தை நுகரவைத்து
இன்பத்தின் மறுகோடியையும்
காட்டிவிட வேண்டுமென்ற
துடிப்பா.
விளங்கவில்லை எமக்கு.
இன்பத்தின் ஈரம் காயுமுன்பே
துன்பத்தின் வெம்மையைத்
தந்துவிட்ட
அந்தத் தண்டனை போதும் போதும்
என் அன்பு மகனே
போதும் போய் வா
அப்போது
நீ திரும்பி வருவாயென்றுதானே
வழியனுப்பி வைத்தேன்
இப்போதும் வழியனுப்புகிறேன்.
சென்றுவிடு மகனே
அப்பு, ஆச்சி, ஐயா, அம்மாவிடம்
சென்றுவிடு மகனே.
சென்றுவிடு மகனே
அந்த
ஆலடி பாலகணபதியின்
பாதாரங்களில்
சென்றுவிடு மகனே!

அப்பா

# நிழலின் நிழல்

"ஈழமுரசு" ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்கி பனையின் நிழல் என்னும் இந்தக் குறுநாவலை 1984இல் எழுதினேன். அப்பொழுது நண்பர் 'ரமணி' அவர்களின் விளக்கச் சித்திரங்களுடன் வாரந்தோறும் இந்தக் குறுநாவல் தொடர்ந்து பத்திரிகையில் வெளிவந்தது. இன்று ரமணி அவர்களின் அட்டைப்பட ஓவியத்துடன் இது நூலாக வெளியிடப்படுகின்றது. இந்தக் குறுநாவல் 'ஈழமுரசில்' ஆரம்பமான சமயம் இதற்கோர் அறிமுகம், மதிப்புக்குரிய மக்கள் எழுத்தாளர் கே.டானியல் அவர்கள் பத்திரிகையில் எழுதினார். அந்த அறிமுகவுரையின் ஒரு பகுதி இந்த நூலின் பின் அட்டையில் இடம்பெறுகின்றது.

பொருள் இல்லாதவர்களுக்கு இனிய வாழ்வில்லை. மனிதன் நிச்சயம் தேடிக்கொள்ளவேண்டியது பொருள். ஆனால் பொருள் மாத்திரந்தான் வாழ்வென்றில்லை.

பொருள் சம்பாதிப்பது ஒன்றினையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, இளம் மனைவியரைப் பிரிந்து, தனித்திருந்து தவிக்கவிட்டு பல கணவன்மார் இன்று வெளிநாடுகளுக்குச் சென்று விடுகின்றார்கள். இவர்களது குடும்பங்களின் மத்தியில் உருவாகும் பிரிவுத் துயர், ஏக்கம், மனப்போராட்டம், சந்தேகம், நெருக்குவாரம், மனஇறுக்கம் என்பன பெரும்பாலும் தவிர்க்க இயலாது காலப்போக்கில் தோன்றுகின்றன. இத்தகைய வாழ்வின் சீரழிவினைச் சித்திரிக்கும் ஈழத்து நாவல் அல்லது குறுநாவல் இதற்கு முன்னர் இன்னொன்று வெளிவரவில்லை. இதுவே முதற்படைப்பு.

இந்தக் குறுநாவலை எழுதும்போதில் வெளிநாட்டு அனுபவங்கள் சிலவற்றைச் சொல்லவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. அந்தச் சமயம் புதுவை இரத்தினதுரை, வதிரி வே.ரூபானந்தன் இருவரும் சில அனுபவங்களைச் சொல்லக் கேட்டுப் பதிவுசெய்துகொண்டேன்.

இந்த நூலில் கலாநிதி த.கலாமணி அவர்கள் குறிப்பு ஒன்றினை எழுதியுள்ளார்.

அல்வாய் க.மகேந்திரராஜா மயூரன் அவர்களின் நினைவாக இந்நூல் இன்று வெளிவரும் வேளையில் இதனுடன் தொடர்புபட்ட அனைவரையும் நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

**தெணியான்**

கலையருவி,
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை.
06.06.2006.

## முன்னீடாய் சில வரிகள்...

- கலாநிதி த.கலாமணி.

மரணங்கள் மலிந்த பூமி இது. உயிர் இழப்புக்களின் போது ஏற்படும் துயரின் அழுத்தங்களிலிருந்து விடுபடும் நோக்கில் பெருங்குரலெடுத்துப் பிரலாபித்து, ஈற்றில் மனித வாழ்வின் நிலையாமையை எடுத்தியம்பி 'தேற்றம்' கூறுதல் காலங்காலமாய் இருந்துவந்த மரபு. இம்மரபு, மனிதவாழ்வை ஆற்றுப்படுத்திவந்த ஒரு வழிமுறையும்கூட. இம்மரபுத் தடத்தில் 'கல்வெட்டு' வெளியீடு உறவுகளின் புலம்பல்களின் தொகுப்பாய் அமைந்தது.

காலப்போக்கில், 'கல்வெட்டு' வெளியீடு 'நினைவு மலர்' வெளியீடாகி, பாராயணம் செய்யப்படவேண்டிய திருமுறைகளின் தொகுப்பாகவும் மாற்றம் கண்டது. இன்று நினைவு மலர் வெளியீட்டினூடாக, பயனுள்ள அறிவியற்திரட்டைத் தொகுத்து வழங்கும் போக்கும் காணப்படுகின்றது. இம்மரபின் வளர்ச்சிப் போக்கில், தனது மகளின் நினைவு வெளியீடாக, ஈழத்துக் கவிஞர்களின் தேர்ந்தெடுத்த கவிதைகளின் தொகுப்பாக அமைந்த 'ஈழத்துக் கவிமலர்கள்' என்ற நூலை இரசிகமணி கனகசெந்திநாதன் அன்று வழங்கினார். இம்மரபு இன்றும் தொடர்வது, ஆக்க இலக்கியங்கள் பல இவ்வெளியீடுகளினூடாக எமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இம்மரபின் தொடர்ச்சியில், இரசிகமணியைத் தொடர்ந்து வ.அ.இராசரத்தினம், என்.சண்முகலிங்கன், ஸ்ரீகணேசன், வளநாடன்... என நீளும் பெயர் வரிசை நினைவுக்கு வருகின்றது. இவர்கள் யாவரும் இலக்கியகாரர்.

இதேவேளை, தெணியானின் 'பனையின் நிழல்' எனும் இந்நாவல் வெளியீடு சற்று வித்தியாசமானது. அண்மையில் அகாலமரணமெய்திய தனது மகன் மயூரனின் நினைவாக இந்நூலை வெளியிடும் திரு.க.மகேந்திரராஜா ஓர் இலக்கியகாரன் அல்லர்; 1984இல் 'ஈழமுரசு' பத்திரிகையில் தொடராக வெளிவந்து நூலுருவாக்கம்பெறக் காத்திருந்த இக்குறுநாவலை அழகுற அச்சிட்டு வெளியிட முன்வந்திருக்கிறார். இவர் போன்ற இலக்கிய ஆர்வலர்களுக்கு இலக்கிய உலகு கடமைப் பட்டிருக்கின்றது. அதேவேளை, இந்நூல் அமைப்பின் நேர்த்தி எவ்வாறிருக்குமென கிலேசமுறாது தனது 'படைப்பு' ஒன்றை நூலாக்கம் செய்ய அநுமதி தந்த கலாபூஷணம், எழுத்தாளர் தெணியானுக்கும் அட்டைப்படம் வரைந்த கலாபூஷணம், ஓவியர் ரமணிக்கும் நன்றி சொல்லவேண்டும்.

குறுக்கு வழியிலேனும் பொருளீட்டுதலும் மனம்போன போக்கில் செலவு செய்தலும் வாழ்க்கைக் குறிக்கோளாகிவிட்ட இன்றைய சமதாயத்தில், பொருளீட்டல் நாடி வெளிநாடு செல்லும் இன்றைய வாழ்க்கைப் போக்கு விளைக்கக்கூடிய வாழ்வின் சிதைவைக் கருப்பொருளாகக் கொண்டுஇந்நாவலினூடாக ஓர் 'அபாய எச்சரிக்கை'யை இன்றைய சமுதாயத்துக்குத் தெணியான் விடுக்கின்றார். தெணியான், நாடறிந்த எழுத்தாளர்; எமது 'முதுசொமாக' பேணப்படவேண்டியவர். தேர்ந்தெடுத்த சொற்களினால், வரம்பு மீறாமல், விரசமின்றி இந்நாவலை வளர்த்துச் சென்றிருக்கின்றார். இந்நாவலும் நாவல் வெளியீடும் இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை.

1

அவள் அடிமனத்தில் உறங்கிக் கிடந்த துடிப்பான உள்ளக் குறிப்புக்கள் திருமணத்தின் பின் வெறிகொண்டு மேலும் மேலும் பொங்கி எழுந்து கொண்டிருந்த காலம் ..........

கடந்துபோன இந்த ஆறுமாத காலமும் கண்மூடித் திறப்பதுபோல் எப்படித்தான் கரைந்து போனதுவோ! இந்தக்காலத்தை நினைத்துப் பார்ப்பதே இனிமை சுரக்கும் பரவசமான ஒரு மோனத் தவமாக அவளுக்குத் தோன்றுகின்றது.

முன்பெல்லாம் அவளுக்கு ஒருயுகம் போல வீட்டுச்சிறையின் சுமையான அழுத்தம் அத்தனை கொடுமையாக அவளை அமுக்கிக் கொண்டிருந்தது.

கடந்த ஆறுமாதங்களாக மின்னல் வெட்டித் தெறிப்பதுபோல் இதயமெல்லாம் இளமையின் தந்திகளை மெல்ல மீட்டி மேலும் மேலும் வசந்த கீதம் இசைத்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைக்க வேண்டுமென்ற அநுபவ லயிப்பில் அவள் உள்ளம் மோகித்தலைகிறது.

திருமணப்பந்தலில் வேதமொலித்தது, பெரியோர்கள் வாழ்த்துக் கூறினர். பரவசமான மின்னோட்டம் உடலில் பாய்ந்து வர மன்மதராஜன்

மலர்க்கரம் பற்றினான். முகம் சிவந்து, தலைகுனிந்து, நாணத்திரைக்குள் உடல் மறைத்து உள்ளத்திற் கிளுகிளுப்பூறிக் கிறங்கி போன நேரம் முதல், அவனோடு கைகோத்துக் கொண்டு கோயில் குளங்களுக்கும், சினிமாக் காட்சிகளுக்கும், நண்பர்கள் உறவினர்கள் இல்லங்களுக்கும் இணைந்து சென்று விருந்தயர்ந்து மகிழ்ந்த பூரிப்பிலிருந்து இன்னும் அவள் முற்றாக விடுபடவில்லை.

இல்லறசுகம் இத்துணை ருசியானதா? என்று அவள் வேட்கையோடு வியந்து மகிழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இன்பமான இனிய கனவொன்று பாதியிலேயே பட்டென்று அறுந்து போவது போல, கொஞ்சமும் எதிர்பாராத விதமாக அவன் அவளிடம் மெல்லச் சொன்னான்.

" நான் வெளிநாடு போகலாமெண்டு நினைக்கிறன்"

"ஏன் ?" அவள் உண்மையில் அதிர்ந்து போனாள்.

"இந்தச் சம்பளத்தோடை இஞ்சை எப்படி வாழுகிறது!"

"சம்பளங் கூடுந்தானே"

"எங்கே கூடப்போகுது! தேங்காய் வாங்கக் காணாது என்ரை சம்பளம் எண்டது எனக்குத் தெரியும். அரசாங்க உத்தியோகமெண்டாலாவது வாழ்க்கைச் செலவு கூடிப் போச்செண்டு ஏதாவது கொஞ்சம் கூட்டித் தருவினம். கூட்டுறவுச் சங்கங்களிலை வேலை செய்யிற என்னைப்போலை ஆக்களின்ரைபாடு ............

"உள்ளது போதும் சமாளிக்கிறது தான்."

"அதெப்படி அரு.......! எல்லாரும் எப்படி வாழுகினம் தெரியல்லையா? நாங்கள் மட்டும்......?

"மற்றவைக்காகவே நாங்கள் வாழுறம்..... !

"எங்களுக்காகத்தான் எண்டு மாத்திரம் சொல்லேலாது. மற்றவையளைப்போல நாங்களும் வாழவேணும். வெளிநாட்டிலைபோய் சம்பாரிச்சுக் கொண்டு வந்திருக்கிறவையின்ரை குடும்பங்கள் எப்படி மின்னுகிது. தெரியுந்தானே! நாங்கள் மாத்திரம் இப்படி இருந்தால் ஆர் மதிக்கப் போகினம் !

"எனக்கேதோ இருக்கிற உத்தியோகத்தை விட்டிட்டுப் போறது.... !

"என்ன உத்தியோகம் இது! பிச்சைச் சம்பளம் வாங்கிற உத்தியோகம் "

"உப்பிடிச் சொல்லிக் கொண்டு போனவைதான் இரண்டு வருஷத்திலை திரும்பி வந்து மிதிச்ச கொப்பும் முறிஞ்சி, பிடிச்ச கொம்பையும் கைவிட்டு தின்னுறதுக்கும் வழியில்லாமல் நடுத்தெருவிலை நிண்டு அந்தரிக்கினம்"

"அருந்ததி எங்களுக்கிப்பென்ன பாரமோ, பழியோ! என்ரை சீவிய காலமெல்லாம் இஞ்சை இருந்து உழைச்சாலும் சம்பாதிக்க முடியாத பணம் இரண்டு வருஷத்திலை தேடிப்போடுவன். அதை வைச்சுக் கொண்டு சுதந்திரமான ஒரு தொழில்துறையைப் பார்க்க வேண்டியதுதான். நாலுபேரைப் போலை நாங்களும் தலைநிமிர்ந்து வாழவேணுமெண்டதுதான் என்ரை ஆசை. இந்தப் பிச்சைக்கார நாட்டிலை இருந்து ஒண்டும் செய்யேலாது"

"எனக்கெண்டால் ........."

"சம்மதமில்லை எண்டுதான் இப்ப சொல்லுவாய். இரண்டு பிள்ளை குட்டி பிறந்து விட்டுதெண்டால், அதுக்குப் பிறகு என்ன சொல்லுவாய் தெரியுமே ! உங்கடை

சம்பளத்தை வைச்சுக் கொண்டு இதுகளை வளக்கிறதெப்படி.? படிப்பிக்கிறதெப்படி? எண்டு என்னைத்தான் நச்சரிக்கப் போறாய். அப்ப என்ரை தலைதானே உருளப் போகுது !."

"அதுக்காக .........."

"இப்பவே போய் வந்து விட்டால், பிறகு கவலைப்படாமல் இருக்கலாம் !:

"இதுகளை பெரிசாக நினைச்சோ ..... எதிர்பார்த்தோ ..... நான்"

"என்னைக் கட்டயில்லை எண்டு சொல்லப் போறாயாக்கும். அது எனக்குத் தெரியும். ஆனால் ஆதாமும் ஏவாளும் போலை நீயும் நானும் மாத்திரமுள்ள உலகமில்லை இது. அரு.. இப்ப இந்தப் பகுதியிலை வீட்டுக்கொருதனாவது வெளிநாட்டிலை இருந்து உழைச்சனுப்புறான். நாங்கள் மட்டும் இப்பிடி இருந்து சரிவருமே !"

"ஏதோ அவசரப்படாமல் யோசிச்சு முடிவெடுங்கோ! எனக்கெண்டால் கொஞ்சமும் விருப்பமில்லை"

முடிவெடுக்கும் பொறுப்பு முழுவதையும் அவனிடமே விட்டுவிடுகிறவள்போல அவள் சொல்லிக் கொண்டாள். ஆனால் அவள் தன் உள்ளத்தில் உறுதியான ஒரு தீர்மானத்தை வைத்துக் கொண்டே பேசினாள். திரும்பவும் சமயம் வாய்க்கும்போது மனத்திலிருக்கும் அந்தத் தீர்மானத்தை அவனிடம் தெளிவாகச் சொல்லி விடவேண்டுமென்றே எண்ணி இருந்தாள். அவன் தன் மனக்கருத்து முழுவதையும் முற்றாக நிராகரிக்க மாட்டான் என்ற நம்பிக்கையும் அவள் மனத்தில் வேரூன்றி இருக்கவே செய்தது.

மன்மதராஜன் இப்பொழுதெல்லாம் வேலை முடிந்ததும் முன்போல ஆவலுடன் வீட்டுக்கு ஓடோடி வருகின்ற வழக்கம் தடைப்பட்டு போய்விட்டது. வேலை இல்லாத ஓய்வு நாட்களில் கூட அவன் வீட்டில் தங்கி நிற்பதில்லை. முன்பெல்லாம் வேலைக்குப் போனாலும் வேலைநேரத்திலும் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டு இடையில் *லீவைப் போட்டுக் கொண்டு* அவசரமாக ஓடிவந்து விடுவான். அந்தச் சமயங்களில் அவள் மனதுக்கு ஆனந்தமாகவும் பூரிப்பாகவும் இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு ஒன்றுமறியாதவள் போல நடித்து சிரித்துக் கொண்டு கேட்பாள்.

"என்ன இடையிலை வந்திட்டியள்?"

"ஒரு சாமானை விட்டிட்டுப் போய்விட்டன். அதுதான்...."

"எடுத்துக் கொண்டு போகப் போறியளாக்கும்"

"ஓமோம் கொண்டு போகப் போறன்"

"அப்ப தூக்கிக் கொண்டு போங்கோவன். ஏன் இருக்கிறியள்

"ஆறுதலாகப் போவம்"

"உங்களுக்கு கந்தோரையும் வீட்டோடை கொண்டு வந்துவிட்டால் சுகமாக இருக்கும். அல்லது ........"

"அல்லதென்ன.... சொல்லன்....."

"உங்களுக்குத்தானே தெரியும்."

"என்ரை அருவை அங்கை கொண்டு போகவேணும்"

அவன் சொல்லிக் கொண்டு அவளை மெல்ல நெருங்குவான்.

"சும்மா போங்கோ..... சமைக்கிற நேரத்திலையும் உங்களுக்குச் சேட்டை. ஆச்சிவரப் போறா" அவள் சிணுங்குவாள்.

இப்போது அப்படி அவன் வருவதில்லை. அவன் வருகையை எதிர்பார்த்து எதிர்பார்த்து அவள் கண்கள் பூத்துப்போகும். வேலை முடிந்து மாலையிலும் அவன் காலம் தாழ்த்தியே வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். அவள் உள்ளம் தினமும் ஏமாந்து ஏமாந்து சலித்துப் போகிறது.

"இண்டைக்கு வரட்டுக்கும், கேக்க வேணும் என்று பல தடவைகள் கொதிப்புடன் அவள் மனதில் எண்ணியதுண்டு. ஆனால் அவனை நேரில் கண்டதுமே அந்தக் கொதிப்புக்கள் எல்லாம் மறந்து உள்ளம் நிறைந்து போவாள்.

அவன் வருகை தினந்தினம் தாமதமாகிக் கொண்டு போவதில் அவளால் இந்த ஏமாற்றத்தை தாங்கிக் கொள்வதற்கு முடியவில்லை. இனிமேல் தட்டிக் கேட்காமல் சகித்துக் கொண்டிருப்பதற்கு இயலாதென்ற நிலைக்கு அவள் வந்தாள்.

அன்று பொறுமையை இழந்து அவன் வரவை எதிர்பார்த்த வண்ணம் வீட்டு வாசற்படியில் வந்து குந்தியிருந்தாள். அவள் பார்வை வாசலுக்கு எதிரேயுள்ள வெளிப்படலையை ஏக்கத்துடன் வெறித்து நோக்கிக் கொண்டிருந்தது.

வீட்டிலே விளக்கேற்றியாயிற்று. பார்வதி ஆச்சி உள்ளே இருந்து அடிக்கடி அவளை எட்டிப் பார்ப்பதும் பெருமூச்சு விடுவதுமாக மனம் உளைந்து கொண்டிருக்கிறாள்.

அவன் களைத்துச் சோர்ந்து போன முகத்துடன் படலையைத் திறந்து கொண்டு சயிக்கிளை உருட்டிய வண்ணம் உள்ளே வருகின்றான்.

அவள் சட்டென்று எழுந்து நின்று கொள்கிறாள்.

மனப்பாரம் அவள் நெஞ்சை அழுத்துகின்றது.

அவனைக் கண்ணெதிரே காணாதவரை உள்ளே கனன்று கொண்டிருந்த அவள் உள்ளம் இப்போது உள்ளடங்கி அவிந்து போகின்றது. அவனைக் கண்டதும் இன்று பொரிந்து தள்ள வேண்டுமென்று சினந்து கொண்டிருந்த அந்த உள்ளம் உறைந்து ஊமையாகி விடுகிறது.

அவன் வருகின்றான் என்பதை அறிந்ததும் வழமைபோல வாசலைத் தாண்டி முற்றத்துக்கு வந்து வாஞ்சையுடன் சிரித்து மலர்ச்சி கொள்ள முடியவில்லை. இன்று அவள் பார்வையின் கூர்மை அவன் முகத்தைக் குத்துகிறது.

அவன் அவளைப் பார்த்து மெல்லச் சிரிக்கின்றான்.

அவள் முகத்தை வெடுக்கென்று திருப்பிக் கொண்டு வேகமாக வீட்டுக்குள்ளே நுழைகிறாள்.

அவன் கால்மணி நேரத்துக்குள் உடைகளை மாற்றி அந்த வீட்டின் பின்புறமுள்ள கிணற்றுக்குச் சென்று கால் முகங்களை நன்றாகக் கழுவித் துவாய்த்துண்டினால் நன்றாகத் துடைத்து விட்டுக் கொண்டு துவாயைத் தோளிலே தொங்கப் போட்ட வண்ணம் கூடத்துக்குத் திரும்பி வந்து அங்குள்ள மேசையின் முன் அமர்ந்து கொண்டான்.

மேசையில் கண்ணாடி விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது.

அவளுக்கு அவன் முகத்தைத் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

அந்தச் சிறிய வீட்டின் கூடத்தை அண்டி அவனுக்குப் பின்புறமாக உள்ள அடுக்களைக்குள்ளே அவள், அந்தக் கூடத்தின் தென்புறமாக இருக்கும் இரண்டு அறைகளுள் ஒன்று பூஜைஅறை. அதற்குள்ளே பார்வதி ஆச்சி புகுந்து விட்டாள்.

அவள் வேண்டுமென்றே இன்று தாமதமாக மெல்லத் தேநீரைத் தயாரித்துக் கொண்டிருக்கிறாள். அவள் சற்றுத் தாமதமானால் அதைச் சாட்டாக வைத்துக் கொண்டு அவளைத் தேடிக் கொண்டு அடுக்களைக்குள் நுழைந்து விடுவதுதான் அவன் வழக்கம். இன்றும் அவன் தன்னை நாடிக் கொண்டு அங்கு வரவேண்டுமென்றே அவள் எதிர்பார்த்தாள்.

நேரம் ஊர்ந்து செல்லச் செல்ல அவள் இதயத்துடிப்பும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அவள் எதிர்பார்த்ததுபோல அவன் எழுந்து அங்கு வரவே இல்லை. அவளுக்கொரே ஏமாற்றம். வெப்பிசாரத்தால் அவள் இதயம் பொருமுகிறது. "ஆசை அறுபது நாள் மோகம் முப்பதுநாள்" என்பார்களே அப்படித்தான் இவருக்கும் என்று நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் வெதும்பி வெடித்து விடும்போலத் தோன்றுகிறன்றன.

பெருமூச்செறிந்த வண்ணம் தேநீரை எடுத்து வந்து மேசையின்மேல் வைத்துவிட்டு எள்ளுப்பாகொன்றை அவன் கையிற் கொடுக்கின்றாள். அவன் அதை வாங்கிக் கொண்டு தலை நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்து சிரிக்கின்றான்.

அவளால் அவன் போலச் சிரிக்க முடியவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் அவனருகே நின்றால் பொங்கிக் கொண்டு அழுகையே வந்துவிடும்போலத் தோன்றுகிறது.

பொங்கிக் கொண்டு வந்த உள்ளக் குமுறலை உதட்டோடு சேர்த்துக் கடித்த வண்ணம் வெடுக்கென்று அடுக்களைக்குத் திரும்புகின்றாள்.

அவன் பாகைக் கடித்துச் சுவைத்த வண்ணம் மேசையின் மீதுள்ள புத்தகத்தில் கவனத்தைச் செலுத்துகின்றான்.

அவன் அன்பாக ஒரு வார்த்தை தானும் பேசாமல் அவளை ஒதுக்கிவிட்டது போல் நடந்து கொண்டது அவள் நெஞ்சத்தை போட்டு நெருடுகிறது.

"ஏன் இந்த விலகல்? ஏன்? ஏன்? இதற்குள் இவருக்கெல்லாம் ....? எனக்கு அப்படியில்லையே! அல்லது வேறு.....? அப்படி நினைத்துப் பார்ப்பதைக் கூட என் இதயத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே!"

அவள் தன் உள்ளத்தில் எழுந்துள்ள ஐயங்களுக்கு விடைகாண இயலாது தவித்தாள். தன்வாழ்வு இந்தக் குறுகிய காலத்துக்குள்ளேயே கருகி எதிர்காலம் இருண்டு பாழடைந்து போய்விடுமோ என்று எண்ணிக் குமுறிக் குமுறி அழுதாள்.

ஆனால் அவன்.?

உ.

மன்மதராஜன் அவள் மனநிலைகளைப் புரிந்து கொண்டவனாகவோ அவளுக்காக அனுதாபப்படுகின்ற வனாகவோ இல்லை. அவளைக் கவனிக்காதவன் போல புத்தகத்தில் முழுக்கவனத்தையும் செலுத்தி அக்கறையாகப் படித்துக் கொண்டிருந்தான்.

நீண்ட நேரத்தின் பின்னர் பார்வதி ஆச்சி பூசை அறையிலிருந்து வெளியே வந்தாள். தினமும் மன்மதராஜன் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டால் தான் மெல்ல மறைந்து ஒதுங்கிக் கொள்வதுதான் அவளுடைய வழக்கம். "நானென்ன வாழ்ந்து கெட்டறியாதவளே! அதுகள் சின்னஞ் சிறிசுகள், சந்தோசமாக இருக்கட்டும்" என்று நினைத்துக் கொண்டு எங்காவது ஒரு மூலைக்குச் சென்று மெல்லச் சரிந்து விடுவாள்.

ஆனால் இப்போது அவர்கள் இருவருக்குமிடையில் தோன்றியிருக்கும் இடைவெளியை அவளும் சில காலமாக அவதானித்து வருகின்றாள். அருந்ததி முகம் வாடி இருப்பதைக் காணும்போதெல்லம் அவள் உள்ளத்தில்

இனம்புரியாத துயரம் வந்து கவியும். அது பற்றி அவளிடமே கேட்டுவிட வேண்டுமென்று சிலசமயங்களில் ஆச்சி நினைத்ததுண்டு. இன்று அவன் மேசையில் தனித்திருப்பதும் அருந்ததி அடுக்களைக்குள்ளேயே ஒளிந்து கொண்டு காலத்தைப் போக்குவதும் ஆச்சியின் மனதை ஏதோ செய்தது.

அவள் அருந்ததியைத் தேடிக்கொண்டு அடுக்களைக்குட் சென்றாள்.

அருந்ததி முகம் வீங்கிக் கண் சிவந்து வாடிப்போய் சுவரோடு சாய்ந்த வண்ணம் இருப்பது கண்டு அவள் உள்ளம் பதறினாள்.

"மேனை .... என்ன மேனை என்ன மேனை நடந்தது!" என்றாள் பதற்றத்துடன்.

பார்வதி ஆச்சி அங்கே வந்து நிற்பதை அப்போதுதான் கண்டு கொண்ட அருந்ததி முகத்தைக் கைகளினால் துடைத்துவிட்டுக் கொண்டு, "ஒண்டுமில்லையெணை" என்று மழுப்பலாகச் சொல்லி மெல்லச் சிரிக்க முயன்றாள்.

"ஏன்மேனை மறைக்கிறாய்! பொடியனும் இப்ப ஒரு மாதிரித்தான் இருக்குது"

"அவர் படிக்கிறார் அம்மம்மா" சமாதானம் சொல்லிக் கொண்டபோதும் தங்கள் இருவருக்குமிடையில் இருக்கும் விலகலை ஆச்சியும் அவதானித்துக் கொண்டு விட்டாள் என்று அறிய உள்ளூர அவளுக்கு வெட்கமாக இருக்கிறது.

"என்ன படிக்கிறார்?" ஆச்சி தொடர்ந்து கேட்டாள்.

"இங்கிலீசு....."

"ஆ ..... அப்படியே! இனிமேல்தான் சீனியர் சூனியர் பாசுபண்ணப்போறாராமே!" கேட்டு விட்டு, அநுதாபம்

இழையோடும் சந்தேகமான ஒரு பார்வையை அவள்மேல் வீசிவிட்டு அங்கிருந்து ஆச்சி வெளியேறினாள்.

பார்வதி ஆச்சியின் பேச்சில் இழைந்த இலேசான நையாண்டியும் சந்தேகமான அந்தப் பார்வையும் அவளை ஏதோ செய்தன. நீ கவனமாக இரு" என்று அவளை எச்சரிப்பது போலவும் அவளக்குத் தோன்றின.

"ஆச்சி இவரிலே எப்பவும் இப்படித்தான்" என்று தன் மனதுக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள் அவள். ஆனால் ஆச்சி தன் கணவனைச் சந்தேகிக்கின்றாள் என்பதும் அவள் மனதுக்குச் சங்கடமாகவே இருக்கிறது. "இதுக்கு ஆச்சியை எப்படிக் கோவிக்கலாம். இவர் சரியாக இருந்தால் ...... இதொன்றும் வராது" என்று அவள் மனம் சலித்துக் கொள்ளுகிறது.

அவள் மனதைப் போட்டுக் குடைந்து கொண்டிருக்கும் குமைச்சல்கள் யாவும் கொஞ்சம் கொஞ்சமாக அவன் பக்கம் திரும்புகின்றன. அடுக்களைக்குள்ளே இருந்து குமைந்து கொண்டிருக்காமல் அவனிடமே நேரிற் கேட்டுவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் அவள் வெளியே வந்து, அவன் அருகேயுள்ள இன்னொரு கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு முகத்தை உம்மென்று வைத்த வண்ணம் அதில் அமர்ந்து கொள்கிறாள்.

அவள் பட்டென்று வந்து அமர்ந்து கொண்டதும் படிப்பிலிருந்து அவன் கவனம் கலைகிறது. தலையைத் திருப்பிஅவள் முகத்தை நோக்கிய வண்ணம் "அரு ..... என்ன ஒருமாதிரி இருக்கிறாய்?" என்று கேட்கிறான்.

"என்ன மாதிரி"என்றாள் வெடுக்கென்று அவள்.

"அரு மாதிரி இல்லையே!" சொல்லிக் கொண்டு அவன் சிரிக்கிறான்.

"அப்ப ..... ஆர் மாதிரி இருக்கிறன்?" சந்தேகத்துடன் அவள் பார்வை அவன் முகத்தில் படர்கிறது.

"ஆர் மாதிரியும் இல்லை. எனக்கு அருவாகத்தான் தெரியுது" முகத்தில் தோன்றிய மலர்ச்சி கொஞ்சமும் குறையாமல் சிரித்துக் கொண்டு கூறுகிறான்.

"ஓ ..... இவர்நல்லாக நடிக்கிறாரோ! ஏன்று மனதில் நினைத்துக் கொண்டு,

"என்ன படிப்பு ..... இந்த வயதிலும்! என்று எரிச்சல் வெளிப்படக் கேட்கிறாள்.

"படிக்கிறதுக்கு வயதில்லை"

"ஓமோம் இனிமேல் படிச்சுத்தான் பட்டம் வாங்கப் போறியளாக்கும்"

"இங்கிலீசு தெரிஞ்சவனுக்கு வெளிநாட்டிலை நல்ல மதிப்பாம்"

உங்களுக்கு வெளிநாட்டு விசர். உந்த விசரிலைதான் வீட்டுக்கு நேரத்துக்கு வாறதுமில்லை. வந்தாலும் ....."

"அரு ..... நீரேனப்பா இப்ப கோவிக்கிறீர்! வேலை முடிஞ்சு ஒரு மணித்தியாலம் இங்கிலிஷ் ரியுசன் எடுத்துக் கொண்டுதான் வாறனான். உம்மட்டச் சொல்ல வேணுமெண்டு நினைச்சுப் போட்டு மறந்து போனன்.

"நேரத்துக்கு வீட்டுக்கு வாறியளில்லை. வந்த பிறகும் ......."

"என்ரை குணம் உமக்குத் தெரியும் அரு! ஒண்டை நினைச்சால் அதைச் செய்து முடிச்சுப் போட்டுத்தான் மற்ற வேலை"

"எனக்கு மட்டுமே! எல்லோருக்கும்தான் தெரியுமே"

"என்ன தெரியும்?"

"நினைச்சது ஒண்டல்ல கனக்கவெண்டு"

"என்ன புதிதாகச் சண்டை கிளப்புறீர்! நினைச்சது ஏதோ ஒண்டைத்தான் ..... உம்மை முடிச்சிருக்கிறன்."

தன்னுடைய பகடியைக் கேட்டு அவள் எல்லாவற்றையும் மறந்து சிரிப்பாள் என்று அவன் எதிர்பார்த்தான். அவள் வாய் திறக்கவில்லை. தாபத்துடன் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளத்து உழைச்சல்கள் நீண்டதொரு பெருமூச்சாக வெளிப்பட்டது.

"வெளிநாடு ..... வெளிநாடு" என்று அவன் சொல்லிக் கொண்டிருப்பது அவள் மனதுக்கு சகிக்க முடியவில்லை.

வெளிநாட்டு மோகம்..... அந்த மோகத்தில் மூழ்கிப் போன படிப்பு ..... அதுக்கான ஒதுங்கல்..... பட்டறிந்த இனிய இளமைச் சுகங்களை எல்லாம் விட்டு விட்டா இப்படி விலகி இருக்க வேண்டும்.! நீயொரு இன்ப ..... என்று சொல்லிச் சொல்லி வளைய வளைய வந்தவர்தானா இவர்.! அதற்குள் எல்லாமே இவருக்குப் புளித்துப் போய் விட்டனவா!" என்ற எண்ணத்தில் அவள் மனம் குறுகுறுக்கிறது.

அவன் தன் கணவனாக இருந்தாலும் இவற்றையெல்லாம் எப்படி ஒரு பெண் அவனுக்கு வாய்விட்டுச் சொல்ல முடியும்!. இவையெல்லாம் அவனுக்கல்லவா புரிய வேண்டும்.. வெளியுலகம் இல்லாது வீட்டோடு வாழும் பெண்ணுக்கு அவள் கணவன்தானே எல்லாம். அவனோடு சேர்ந்து வாழும் அந்த இன்பம் அவளுக்கு இல்லையென்றால் அவளுக்கு வேறென்ன வாழ்வு! இவைகளெல்லாம் இவருக்கேன் புரியவில்லை.

அவள் நெஞ்சம் பொருமி வெளியிடுவதற்கு இயலாத உள்ளக் குமைச்சலினால் தவியாகத் தவிக்கிறது. அவன் மனத்தைப் போட்டுப் பைத்தியமாக அலைத்துக்

கொண்டிருக்கும் வெளிநாட்டு மோகத்தை எப்படியும் போக்கிவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டு சற்றுநேரம் பொறுமையாக இருந்து அலைமோதுகின்ற உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி விட்டு சொன்னாள். "வெளிநாடுகளுக்கு வேலைதேடிப் போறவை அங்கை கக்கூசு கழுவிப்போட்டு பணம் சம்பாரிச்சு இஞ்சை அனுப்புகினமாம்?"

"அதுக்கென்ன ..... அதுவும் வேலைதானே!" என்றான் அவன்.

"அதை இஞ்சை செய்வினமே?"

"அதெப்படி முடியும்!"

"ஏன்முடியாது?"

"இஞ்சை சில தொழில்கள் சில சாதிக்குரியவை. அந்தச் சாதிக்காறன்தான் அதைச் செய்யலாம்."

"நாட்டைவிட்டுப்போய் அந்தத் தொழிலையும் நீங்கள் செய்யலாம்"

"அந்த நாடுகளிலை அது சாதிக்குரிய தொழிலில்லை எண்டாலும் நான் அப்படியெல்லாம் செய்யமாட்டன்"

"ஆர் சொல்லுகினம் உண்மை. வெளிநாடுகளிலை தாங்கள் போய்ச் செய்த வேலையளை நாடு கடந்து போய்விட்டால் என்ன வேலையும் செய்யலாமெண்டு சொல்லுறியள். ஆனால் சாதி வித்தியாசம் பாக்கிறது இல்லாமலே போச்சு!"

"நீரென்னப்பா..... வெளிநாடுகளிலையெல்லாம் சாதி வித்தியாசம் பாக்கினம் எண்டு சொல்லுறீர்! உமக்கொண்டும் விளங்காமல் கதைக்கிறீர்!"

"நான் ஒண்டும் அறியாமல் சொல்லயில்லை. நைசீரியாவுக்கு இஞ்சையிருந்து உத்தியோகம் பார்க்கப்

போயிருக்கின்ற படிச்ச பட்டதாரியள் கூட அங்கைபோய்ச் சாதி சொல்லிச் சண்டை போடுகினமாம்.”

“அட இஞ்சையிருந்து போனவை பார்க்கிற சாதி வித்தியாசத்தைப் பற்றிச் சொல்லுறீரே!”

“ஓமோம்”

“அதிலை எனக்கென்ன வந்திடப் போகுது! நானென்ன குறைஞ்ச சாதியே!”

“அப்படியில்ல. கண்ட நிண்ட சாதியும் செய்யிற வேலையை நீங்களும் போய்ச் செய்தால்.....?”

“நானும் குறைஞ்சு போவிடுவன் எண்டு கவலைப்படுகிறீராக்கும்”

“பின்னயென்ன ..... நீங்கள் படிக்கேக்க பள்ளிக் கூடத்திலை நடந்ததையும் மறந்து போனியள்”

“என்னத்தைச் சொல்லுகிறீர்?”

“உங்களோடை படிச்ச முருகேசனை ஒருநாள் பனையேறி எண்டு பேசி ஹெட்மாஸ்ரரிட்டை அவன்போய்ச் சொல்லி உங்களுக்கு அவர் அடிச்சவரெல்லே. மறந்து போனியளே!”

“முருகேசனல்லோ...” என்று கேட்டுக் கொண்டு அவனை நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்ட மன்மதராஜன், “அதுக்குப் பிறகு என்ன நடந்தது உமக்குத் தெரியுமோ!” என்றான்.

“என்ன நடந்தது?”

“ஹெட்மாஸ்ரர் என்னைத் தனியக் கூப்பிட்டு, “தம்பி .....அவன் கீழ்சாதிப் பயலோடை நீ ஏன்ரா கொளுவுறாய்!. பனையேறி எண்டவுடனை அவனுக்கு ரோசம் வந்திட்டுது. நான் கடமைக்காகத்தான் இரண்டடி உனக்கு அடிச்சனான். நீ அவனோடை சினேகிதம் வைக்காதே” எண்டுதான் சொல்லி அனுப்பினவர்”

“அப்ப நீங்கள் பனையேறி எண்டு சொல்லிப் பழிச்ச நீங்கள். இப்ப .....”

“வெளிநாட்டுக்குப் போய் பனையே ஏறப்போறன்.....”

“பனை ஏறுவதைவிடக் கேவலமான தொழிலும் செய்ய வேண்டி வரும். கண்ட சாதியையும்போல காசு எப்பிடி வந்தாலும் சரியெண்டிட்டு, நாங்கள் எந்தத் தொழிலையும் செய்யக் கூடாது. எங்களுக்கெண்டுள்ள மதிப்பு மரியாதையளைக் கைவிட்டு நடக்கக் கூடாது.”

“அரு ..... உனக்கொண்டு சொல்லுறன், நான் வெளிநாட்டுக்குப் போய் எந்தவொரு கூலித்தொழிலும் செய்ய மாட்டன். அதுக்குத் தகுந்த ஒழுங்கோடைதான் இஞ்சையிருந்து கிளம்புவன்.”

“ஓ ..... பெரிய உத்தியோகம் பார்க்கப் போறியளாக்கும்”.

“இல்லை அரு ..... நான் சும்மா சொல்லவில்லை”

“சும்மா உந்த எண்ணத்தை விட்டிட்டு.....”

“கையைக் கட்டிக் கொண்டு வீட்டுக்குள்ள குந்தி இருக்கச் சொல்லுறீராக்கும். உலகம் போற போக்கு உமக்குத் தெரியவில்லை.” என்று பேச்சைத் தட்டிக் கழித்தவன் முருகேசனை ஒரு தடவை நினைத்துக் கொண்டான்.

தான் என்ன நியாயங்களையெல்லாம் எடுத்துச் சொன்னாலும் அவன் அதை ஏற்றுக் கொள்ளப் பேவதில்லை என்று புரிந்து கொண்ட அவள் திடீரென்று எழுந்து சமயலறை நோக்கி நடந்தாள்.

அவள் தன்மேற் கோபித்துக் கொண்டு எழுந்து செல்கின்ற போதும் கருநாகம் போல பின்னிவிடப்பட்டிருக்கும் அவளுடைய நீண்ட கூந்தல் முதுகில் அரைந்து முழந்தாளைத் தொட்டு அசைந்தாடும் அழகில் மனம் லயித்துக் கிறங்கிப் போன அவன், அங்கிருந்து மெல்ல எழுந்து அவளுக்குப் பின்னே நடந்தான்.

3

அருந்ததி முருகேசன் பற்றிக் குறிப்பட்டுச் சொன்ன போது மன்மதராஜன் நெஞ்சில் சுருக்கென்று குத்தியது. புத்தியில்லாத பிஞ்சுப் பருவத்தில் முருகேசனின் மனம் புண்படும் என்பதை உணராமல் அவன் சாதித் தொழிலை இழிவாகச் சொல்லி தவறுதலாக நடந்து விட்டேன் என்று எண்ணி அவன் வேதனைப்படவில்லை. இப்போது வேண்டுமானாலும் அப்படிச் சொல்வதில் பிழையேதுமில்லையென அவன் வாதிடவும் தயாராகவுள்ளவன்.

ஆனால் இன்று அவன் உள்ளத்தில் வெளிநாட்டுச் சம்பாதியத்தின் மேல் தணியாத ஆசை பொறியாக விழுந்து கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பெரு நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது.

அவன் ஒரு தினம் வேலை முடிந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்க காரியாலயத்தில் இருந்து சோர்வுடன் வீட்டுக்குத் திரும்பிச் சயிக்கிளில் வந்து கொண்டிருந்தான். அப்போது எதிரில் வந்து கொண்டிருந்த ஒருவன் அவனைக்

கடந்து சிறிது தூரம் சென்று, சட்டென்று நின்று திரும்பி அவனைப் பார்த்து "ஹலோ ராஜ்" என்று அழைத்த குரல் கேட்டு அவனும் திரும்பினான்.

முதலில் அவனுக்குச் சந்தேகமாகவே இருந்தது. அந்த அழைப்பு தனக்குத்தானா என்று. ஆனால் அந்தக் குரல் எங்கோ கேட்டதாக நன்கு பரிச்சயமானதாகவே அவனுக்கு தோன்றியது.

அவன் தன் சயிக்கிளைத் திருப்பிக் கொண்டு அந்தக் குரலுக்குரியவன் முன்னே சென்று சயிக்கிளிலிருந்து இறங்கி நின்று கொண்டு தலையிலிருந்து கால்வரை அவனை ஏறஇறங்கப் பார்க்கின்றான்.

மேல்நாட்டு உடையில் "ஹிப்பித் தலையுடன்" அந்த இளைஞன் அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டு நின்றான். அவனுடைய கழுத்திலே தங்கச் சங்கிலி ஒன்று மின்னிக் கொண்டிருப்பதும் கண்களிற்படுகிறது. அவன் பூசிக் கொண்டிருக்கும் விலையுயர்ந்த கொலோன் மணம் மூக்கைத் தொடுகிறது. "யாரோ பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் என்று எண்ணிக் கொண்ட அவனுக்கு அந்த வாலிபன் யாரென்பது மட்டும் விளங்கவில்லை.

"ஹலோ ராஜ் என்னைத் தெரியவில்லையா!" என்று அவன் கேட்டபோது, "நீங்கள்" என்று பவ்வியமாக இழுத்துக் கொண்டு தடுமாறினான் மன்மதராஜன்.

"உண்மையிலை என்னைத் தெரியவில்லையா?" என்று மீண்டும் சிரித்துக் கொண்டே கேட்டான் வாலிபன்.

அந்த முகத்தில் முன்னர் எங்கோ பார்த்த ஒரு முகத்தின் சாயல் மெலிதாக அரும்புவது போலத் தோன்றினாலும் முன்னர் பார்த்துப் பழகிய அந்த முகம் எதுவென்பதை அவனாற் கண்டு கொள்ள முடியவில்லை. அதனால் இவ்வளவு உரிமையுடன் பேசும் அந்த

வாலிபனிடம் தன்னை மறைத்துப் பேசுவதற்கும் அவன் விரும்பவில்லை. அந்த வாலிபனின் ஆடம்பரமான உடையும் அங்க அசைவுகளும், அவன் பேசுகின்ற பாவமும், நாகரிகமான தொனியும் மேலும் அவனிடத்தில் மதிப்பை உயர்த்திக் கொண்டு செல்ல, "உண்மையாகவே தெரியவில்லை, தெரிஞ்சால் ஏன் மறைக்க வேணும். என்றான் மிக அடக்கமாக.

"என்ன ராஜ் உங்களுக்கு முருகேசனைத் தெரியாதா?" என்று கேட்டான் அந்த வாலிபன்.

"எந்த ..... ! சந்தேகத்துடன் அவனை யாரென்று இனம்கண்டு கொள்ளும் தனக்குள்ளான தேடல் முயற்சியில் குரல் நீண்டொலித்தது.

"உங்களோடை படிச்ச முருகேசன் ....." என்று அவன் சொல்லி வாய் மூடுவதற்கு முன், "அட நீயேடா அப்பா, எனக்காளைத் தெரியவில்லை" என்று சுதாகரித்துக் கொண்டு மன்மதராஜன் தலைநிமிர்ந்தான்.

முருகேசனின் முகம் மன்மதராஜனின் திடீர் மாற்றத்தைக் கண்டு சுண்டிப் போயிற்று.

"எங்கயப்பா இருந்தநீ" என்றான் தொடர்ந்து மன்மதராஜன்.

"சவூதியிலை" என்றான் மிடுக்காகவே முருகேசன்.

"எவ்வளவு காலம்!"

"இரண்டு வருஷம்"

"எப்ப வந்தநீ!"

மூண்டு கிழமையாச்சு"

"பிறகும் போற யோசினை இருக்கோ!"

"இன்னும் ஒரு மாசம் முடியப் பிளைற்"

"ஹூம் ..... எனக்கும் வெளியிலை போற எண்ணம் இருக்குத்தான்".

அவனைக் கணடு உண்டான மனஉளைச்சலில் சடுதியாக மனதில் எழுந்த உந்துதலை வெளியிட்டான்.

“அது நல்லதுதான். நிறையச் சம்பாதிக்க வேண்டுமானால் ‘கப்பலுக்குப்போ, அல்லது கடல் கடந்து போ’ என்பதுதானே புதுமொழி”.

“அப்பசரி, நீ வாவன்” என்று சுருக்கமாகச் சொல்லி விட்டு சயிக்கிளை திருப்பிக் கொண்டு புறப்பட்டான் மன்மதராஜன்.

அன்றைக்கே அவன் வெளிநாடு சென்று பணம் சம்பாதித்துக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் திடசங்கற்பமாக நிலைத்துப் பதிந்தது.

4

அன்று வெள்ளிக்கிழமை. அருந்ததி வழமையிலும் முன்னதாகவே படுக்கையிலிருந்து எழுந்து விட்டாள். மன்மதராஜன் வெளிநாடு சென்ற நாள்முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் அந்த ஊரின் ஒரு கோடியிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு காலையில் சென்று வழிபாடு செய்து கொண்டு திரும்பிய பின்னர்தான், அவள் மற்றக் காரியங்களைக் கவனிப்பது வழக்கம்.

திருமணத்திற்கு முன்பு வீட்டிலிருந்து இப்படி அவள் வெளியே போய் வந்து திரிந்த ஒருத்தி அல்லள். அவள் பாடசாலைக்கு சென்று வந்ததே அயல்வீட்டு மாணிக்க வாத்தியாரின் விடாப்பிடியான வற்புறுத்தலினால் தான். அவர் அப்படி நிற்காது விட்டால் வயதுக்கு வந்ததன் பின்னர் அவள் பள்ளிக்கூடப்பக்கம் திரும்பிப் பார்ப்பதற்கும் பார்வதி ஆச்சி விட்டிருக்க மாட்டாள். பாடசாலை வாழ்க்கை முடிந்த பிறகு அவளுக்கு வீடொன்றே உலகமாக இருந்து வந்தது.

பார்வதி ஆச்சி மிகவும் கண்டிப்பானவள். அருந்ததியின் விஷயத்தில் ஆச்சி மிகவும் கண்டிப்பாக

இருப்பதற்கு காரணம், அருந்ததி ஒருத்திதான் இன்று அவள் உயிராக இருக்கின்றாள்.

அருந்ததிக்கு பத்து வயதாகும்போது அவள் தாய் இறந்து போனாள். அந்த வருடமே அவள் தகப்பனும் இறந்தபோது செய்வதறியாது பார்வதி ஆச்சியும் நடைப்பிணமாகவே மாறிப் போனாள்.

ஒரு வருட காலத்துக்குள்ளேயே ஒன்றன்பின் ஒன்றாக தன் குடும்பத்தின்மேல் வந்து விழுந்த பேரிடிகளைத் தாங்கிக் கொள்ள இயலாமல் ஆச்சி ஈடாடிப் போனாள்.

ஆச்சியின் இன்ப துன்பங்களுக்கெல்லாம் எப்போதும் அவளுக்குத் தோள் கொடுத்து உதவுகின்ற ஒருவர் உண்டென்றால் அவர் மாணிக்கம் வாத்தியார்தான். ஆச்சிக்கு அவர் தூரத்து உறவுக்காரனாகவும் இருந்தார். ஆச்சி அவரையே தனது மூத்த பிள்ளையாகத் தன் மனதில் வரிந்து கொண்டாள்.

"ஆச்சி நீ அழக்கூடாது. உனக்கு மகளுக்கு மகளாக அருந்ததி இருக்கின்றாள். அவளை வளர்த்தெடுக்கிறது தான் உன்ரை கடமை. ஊருலகம் மெச்சத் தகுந்த வண்ணம் அவளை வளர்க்க வேணும். அவள் வளர்ந்து ஆட்பட்டு விட்டால் உனக்கென்ன கவலை. உனக்கும் அவள் ஆதாரமாக இருப்பாள். நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். உரிய நேரத்திலே நான் கவனித்துக் கொள்ளுவன்". செய்வதறியாது ஏங்கித் தளர்ந்து போயிருந்த சமயத்தில் அவளுக்கு அவர் கூறிய ஆறுதல் மொழிகள் உள்ளத்தில் தெம்பைக் கொடுத்து, எப்போதும் அவள் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

அவருடைய அந்த ஆறுதல் வார்த்தைகளின் பின்பு அவள் கண்ணீர் விட்டு அழுது அரற்றுவதைக் கைவிட்டாள். "தாய் தேப்பனைத் தின்னி, கெட்டழிஞ்சு போய்ச்சுது" என்ற பெயர் அருந்ததிக்கு வந்துவிடக் கூடாது என்று அக்கறையோடு அவளை வளர்ப்பதில் எப்போதும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு விழிப்பாக இருந்து வந்தாள்.

அருந்ததி வீட்டைவிட்டு வெளியே கிளம்பி விட்டாளென்றால், ஆச்சி மனம் தரித்து ஓரிடத்தில் இருக்கவே மாட்டாள். அவளுக்கு வீட்டில் என்ன வேலை இருந்தபோதும் அடிக்கடி வாசலுக்கு வந்து "பிள்ளை வாறாளோ, பிள்ளை வாறாளோ" என்று பார்த்துக் கொண்டே இருப்பாள்.சில சமயங்களில் அருந்ததி வெளியே சென்று திரும்பி வருவதற்கு நீண்ட நேரமாகிவிட்டால் அவள் வரவை எதிர்பார்த்து ஆச்சி வீட்டு வாசலில் வந்து குந்தி விடுவாள்.

இப்போது வரவர அவளுக்கு அச்சம் அதிகம். இன்று நாட்டின் நிலைமை முந்திய காலங்கள் போல அல்லவே. தினமும் எங்காவது நடந்து கொண்டிருப்பதாக அவள் கேள்விப்படும் சம்பவங்கள், மேலும் அவளை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

"நகை நட்டோடை போன பொடிச்சி, இன்னும் காணயில்லை. காலமிப்ப கலிகாலம்" ஆச்சி சொல்லிக் கொண்டு வாசலில் வந்து குந்தி இருக்கிறாள்.

அருந்ததி கோயிலுக்குச் சென்று விட்டால் அங்கிருந்து விரைவிற் கிளம்புவதற்கு மனம் வருவதில்லை.

கோயிலிலிருந்து திரும்பி வந்துவிட்டாலும் திரும்பவும் எப்போது அடுத்த வெள்ளிக்கிழமை வரப்போகின்றதென்றே அவள் உள்ளம் ஏங்குவதற்கு ஆரம்பித்துவிடும்.

"திருமணம் என்பது பெண்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடல்ல. முன்னேறிக் கொண்டுவரும் சமூகத்தில் பெண்களது கட்டுக்களை அறுத்தெறிந்துவிடும் ஒரு சடங்குதான். திருமணம் ஒன்று நடந்தேறும்வரைதான் சில தடைகள். அதன் பிறகு தடைகள் எதற்கு?" என்ற விதமான மனோபாவத்துடன் வீட்டுக்கு வெளியே அலைகின்றவள் அல்லள் அருந்ததி. அத்தகைய உணர்வோடு அவள் ஆலயத்துக்குப் போவதுமில்லை.

அவள் தன் கணவனுடைய சுகத்தை வேண்டியே ஆலயத்தில் எப்போதும் பிரார்த்திக்கின்றாள். அந்தப் பிரார்த்தனையாலும் அவள் மனதுக்கொரு சுகமிருக்கிறது. கணவனின் பிரிவுத்துயரினால் அவளை அழுத்திக் கொண்டிருக்கும் மனப்பாரம் கோயில் வழிபாட்டால் குறைந்து மனம் இலேசாவது போன்ற ஓர் உணர்வு அவளுள்ளே தோன்றுகிறது.

அந்தப்பிள்ளையார் கோயில்..... அதற்கு தென்புறமாக குளிர்ந்து நிற்கும் அரசமரம்..... கோவிலுக்கும் அரசமரத்துக்குமிடையே உள்ள குளம்..... கோயிலைச் சுற்றிவர நான்கு வீதிகளிலும் குவிந்து கிடக்கும் வெண்மணற்பரப்பு..... எல்லாமே அவள் மனதுக்கு இதமளிக்கின்றன. அந்த அரசமரக் குளிர் நிழலில் கொஞ்ச நேரம் ஆறுதலாக அமர்ந்திருக்க வேண்டுமென்ற விதமான அவா அவள் உள்ளத்தில் பல தடவைகள் எழுந்ததுண்டு. ஆனால் அப்படி அவள் இருப்பதில்லை.

இளம்பெண்ணொருத்தி தனித்து ஆலய வீதியில் அரசமர நிழலில் அமர்ந்திருந்தால் என்ன சொல்வார்கள்! வீண் பழிப்புக்கிடமாகும் என்று மனதில் தோன்றும் அச்சத்தினாலேயே அப்படி ஒருபோதும் இருந்ததில்லை.

ஆனால் அதே சமயம் கோயிலிருந்து அவசரமாகப் புறப்பட்டு செல்வதற்கும் மனம் இடங்கொடுக்காது. அவள் மிக ஆறுதலாக வழிபாட்டை முடித்துக் கொண்டு அங்கிருந்து மெல்லப் புறப்படுவாள்.

பார்வதி ஆச்சிக்கு அதற்கிடையில் உயிர்போய்விடும். பிள்ளையைக் காணவில்லையே.... என்று சதா அவள் மனம் அலட்டிக் கொண்டேயிருக்கும்.

அருந்ததி படலையைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறாள்.

பார்வதி ஆச்சிக்கு உள்ளத்தில் பால்வார்த்தது போல, இதுவரை அவள் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்த ஏக்கமும் அச்சமும் அவளையறியாமல் காற்றாகப் பறக்கின்றன.

அருந்ததி அதிகாலையில் எழுந்து நீராடி ஈரம் துடைத்து விட்டு இடையிற் பிடித்துக் கட்டி விட்டிருக்கும் கூந்தல், அலை அலையாகக் காற்றிலே தவழுகின்றது. நெற்றியிற் பட்டும் படாமல் பூசியிருக்கும் மெல்லிய திருநீற்றுக்குறி, அதன்நடுவே நறுக்காக இடப்பட்டிருக்கும் சந்தனத் திலகம், இளஞ்சிவப்பு வண்ணத்தில் ஆவிபோன்ற அழகிய மேலாடை, அவள் மார்பகங்கள் போல மேலெழுந்து நிமிர்ந்த மூக்கு, வாளிப்பான உடற்கட்டுக்கு எழில் கூட்டும் மெல்லிய இடை, முழு நிலவொன்று முகிலைக்கிழித்துக் கொண்டு மேலெழுந்து வருவதுபோல அவளைப் பார்த்தபோது ஆச்சிக்கு தோன்றுகிறது.

ஒரு கணம் தனக்கெதிரில் வருபவள் அருந்ததி என்பதை ஆச்சி மறந்து போனாள். ஆச்சியின் மகள் உயிர்பெற்று எழுந்து வருகிறாள் போன்ற பிரமையில் அவள் கிறங்கிப் போனாள். “ஆச்சி உனக்கு மகளுக்கு மகளாக அருந்ததி இருக்கிறாள்” என்று வாத்தியார் சொன்ன

வார்த்தைகள் இப்போது ஆச்சியின் நினைவுக்கு வந்ததால் அவள் மெய்சிலிர்த்துப் போகிறாள்.

"என்ரை கண்ணே என்ரை பிள்ளைக்குப் பட்டுவிடும்போலை கிடக்குது" என்று நினைத்துக் கொண்டு அவள்மேல் பதிந்த பார்வையை மீட்டு வேறு திசைக்குத் திருப்பிக் கொண்டு ஆச்சி கேட்டாள்.

"ஏன் பிள்ளை இவ்வளவும் சுணங்கினநீ?"

"கோயிலுக்குப் போனா ஆறுதலாகத் தானே கும்பிடவேண்டும்."

"காதிலை கழுத்திலை போட்டுக் கொண்டு போற நீ ....."

"இதுகளுக்கெல்லாம் பயந்தால் .....?"

"மனோரதனைத் துணைக்குக் கூட்டிக் கொண்டு போகாதன் பிள்ளை.!"

"கோயிலுக்கும் அவனே!"

அருந்ததி சொல்லிக் கொண்டு வீட்டு வாசலைத் தாண்டி ஆச்சியைக் கடந்து உள்ளே போயக் கொண்டிருந்தாள். அப்போதுதான் தற்செயலாக ஆச்சி அவள் கழுத்தை உன்னிப்பாக கவனித்தாள்.

அருந்ததியின் கழுத்தில் தாலிக்கொடி மாத்திரந்தான் இருக்கின்றது.

பார்க்கின்றவர்களின் கண்களைக் குத்தத் தகுந்த பெரிய பதக்கம் கோத்த இரட்டைப் பட்டுச் சங்கிலியை காணவில்லை. அதன் பிறகு ஆச்சி அவசர அவசரமாக கைகளைக் கவனித்தாள். ஒருசோடி காப்புக் குறைகிறது.

ஆச்சியின் உள்ளத்திலே ஒரு பதற்றம்.

அவளுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம்.

"பிள்ளை இஞ்சை கொஞ்சம் நில்" அழைத்துக் கொண்டு அருந்ததிக்குப் பின்னால் எழுந்து சென்று அவளை முன்மறித்து நின்று கொண்டாள். அவள் முகத்தை சந்தேகத்துடன் குறிப்பாகப் பார்த்துக் கேட்டாள். "உன்ரை சங்கிலி காப்பு எங்கே?"

ஆச்சி இப்படி திடீரென்று கேட்பாள் என்று அருந்ததி எதிர்பார்க்கவே இல்லை. ஆச்சி அதைக் கண்டு கொள்ளாத வண்ணம் தன்னால் இயன்றளவுக்கு அவள் இதுவரை மறைத்துத்தான் வந்தாள். ஆனால் இன்று ஆச்சி இப்படிக் கேட்டதும் அவள் உள்ளம் அதிர்ந்து போயிற்று. அந்த அதிர்ச்சியை வெளியிற் காட்டிக் கொள்ளாமல் தன்னை மறைத்துச் சமாளித்துக் கொண்டு "அது கிடக்கணை அம்மம்மா" என்றாள் சாதாரணமாக.

ஆச்சிக்கு அவள் பேச்சில் நம்பிக்கையில்லை.

"பிள்ளை எனக்கு மறைக்காதை! உன்ரை வாயிலை பொய் வரக்கூடாது. உன்னை நான் அப்படி வழக்கையில்லை. உண்மையைச் சொல்லுமேனை!" ஆச்சி அருந்ததியை விடுவதாக இல்லை.

அருந்ததி ஆச்சியை ஒருதடவை நிமிர்ந்து பார்த்துவிட்டு தலை கவிழ்ந்து கொள்கிறாள்.

"என்ன மேனை பேசிறாயில்லை. நீ பொய் சொல்ல மாட்டாயெண்டு எனக்குத் தெரியும். "உன்ரை நகையளுக்கு என்ன நடந்தது?" ஆச்சி மீண்டும் அவளை வற்புறுத்துகின்றாள்.

"அவர் வெளிநாட்டுக்குப் போறதுக்கு....."

"அடைவு வைச்சிட்டார்..... அப்படித்தானே! எனக்குத் தெரியும் அவர் அடுக்குப் பண்ணயிக்கையே - . அதுகள் வித்துத்தின்னிச் சாதியள்.. அவர் வரேக்கை

இஞ்சை என்ன கொண்டந்தவர்!" நான் அப்பவே சொன்னான்... அவரைப் பற்றி ....." என்று ஆச்சி ஒப்பாரி வைப்பதுபோல சொல்லிக் கொண்டே போனாள்.

"அம்மம்மா....." அருந்ததியின் குரல் சற்றுக் கடுமையாகச் சீறிக் கொண்டு இடை மறிக்கிறது.

"மேனை ..... உன்ரை புரியனைப் பற்றி நான் இப்ப தூத்தயில்லை. கலியாணத்துக்கு முந்தியே சொன்னனான். இந்தச் சம்பந்தம் வேண்டாமெண்டு. நீ கேட்டியே!" ஆச்சி கொஞ்சம் உள்ளடங்கி, தன் மனக் கொதிப்பை வெளியிட்டாள்.

ஆச்சிக்கு இதன்பிறகும் என்னென்னவோவெல்லாம் சொல்ல வேண்டும் போல அவள் மனம் குறுகுறுக்கின்றது. ஆனால் அருந்ததிக்கு அது பிடிக்காது என்று நினைத்துக் கொண்டு துயரத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

ஆச்சியின் பேச்சைக் கேட்டு, அவளைக் கோபித்துக் கொள்ளவும் அருந்ததிக்கு முடியவில்லை. அவள் கணவனைப் பற்றி இப்படி இழிவாகப் பேசியவள் ஆச்சி அல்லாமல் வேறொருத்தியாக இருந்திருந்தால் இலகுவாக அவளை மன்னித்து விட்டிருக்கவும் மாட்டாள். ஆனால் ஆச்சி பாவம்.! ஆச்சிக்கு எல்லாமே அவள்தான். அந்த ஆச்சியை எப்படி மனம் வருந்த வைக்கலாம்.

ஆச்சியை இப்போது தவிர்த்து விடுவதுதான் சரி. அவளோடு இப்போது மேலும் பேசினால் ..... ஆத்திரந்தான் வரும். என்று நினைத்துக் கொண்டு அருந்ததி ஆச்சியிடமிருந்து விடுபட்டு அறையை நோக்கி நடந்தாள்.

5

மன்மதராஜனை அருந்ததிக்குத் திருமணம் செய்து வைப்பதற்கு ஆச்சி ஆரம்பத்திலிருந்தே விரும்பாதவள்தான்.

அருந்தி பாடசாலைப் படிப்பு முடிந்து வீட்டோடு இருக்கத் தொடங்கிய பிறகு அவளுடைய திருமணத்தை எவ்வளவு விரைவாக ஒப்பேற்றி வைத்துவிடமுடியுமோ அவ்வளவு விரைவாக செய்து விடவேண்டுமென்றே பார்வதி ஆச்சி துடித்துக் கொண்டிருந்தாள். ஒரு குமர்ப்பிள்ளையை வீட்டோடு வைத்துக் கொண்டிருப்பது என்பது மடியில் நெருப்பை கட்டிக் கொண்டிருப்பது போன்ற எண்ணம் ஆச்சியின் மனத்தில் இருந்து வந்தது. அருந்ததிக்கு அவள் மனம் போல ஒரு வரனைத் தேடிக் கொடுக்க வேண்டுமானால் வயது முதிர்ந்த பார்வதி ஆச்சிக்கு அது முடிகின்ற காரியமா? ஆச்சி மாணிக்க வாத்தியாரின் காதில் இடையிடையே போட்டு வைக்க ஆரம்பித்தாள்.

“தம்பி அருந்ததியை இனிமேல் ஒரு நிரையிலை விடவேணும் மோனை!”

"அருந்ததிக்கு இப்ப என்ன வயதாச்சி, இந்தக் காலத்திலை பதினெட்டு வயதிலே கலியாணம் செய்து வைக்கக் கூடாது. எப்படியும் இன்னும் இரண்டு வருஷம் போகட்டும். அதுதான் நான் சொன்னேன். தொடர்ந்து படிக்கட்டும் என்று ஆச்சி கேட்கவில்லை".

"தம்பி மாணிக்கம், ஒரு குமர்ப்பிள்ளையை இந்தக் கிழவியாலை கட்டி மேய்க்கேலாது. நான் இருந்திட்டு கண்ணை மூடிப்போட்டால்..... இந்தக் குமரெல்லே ஆற நிணலில்லாமல் அந்தரிச்சுப் போய்விடும்"

"ஆச்சி அப்படி ஒண்டும் நடவாது. அதெல்லாம் நான் கவனிக்கிறேன். நீ கவலைப்படாதே!"

ஆச்சிக்கு ஆறுதல் கூறி அவளைச் சமாதானப்படுத்தி வைத்திருந்தார் மாணிக்க வாத்தியார். அவர் என்ன சமாதானம் சொல்லிக் கொண்டபோதும் ஆச்சி இடையிடையே அவருக்கு நினைவுபடுத்திக் கொண்டிருந்தாள்.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு வாத்தியார் ஆச்சிக்கு சொல்லிக் கொண்டு வந்தது போல அருந்ததிக்கு வரன்தேட ஆரம்பித்தார்.

வாத்தியாருக்கு சமூகத்தில் இருந்து வந்த மதிப்புக் காரணமாக அவர் முன்வந்து சம்பந்தப் பேச்சு வார்த்தைகள் வைத்திருக்கும் அருநத்தியின் திருமணம் சுலபமாக நிறைவேறி இருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

வாத்தியார் தன் மனதுக்குப் பிடித்த நல்ல இடமாகப் பார்த்து, அவர்களுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து ஓரளவு முற்றான பின்னரே ஆச்சிக்கு விபரமாக எடுத்துச் சொல்லுவார்.

வாத்தியார் பேசிக் கொண்டுவரும் சம்பந்தங்கள் அருந்ததிக்குப் பொருத்தமானதாகவே இருக்குமென்று ஆச்சி நம்பினாள். அதனால் அவள் எந்தவிதமான மறுப்பும் அவருக்குச் சொல்வதில்லை. அவர் கொண்டுவரும் ஒவ்வொரு சம்பந்தமும் நிறைவேறிவிடுமென்றுதான் அவள் எதிர்பார்க்கிறாள்.

ஆனால் அருந்ததி அந்தச் சம்பந்தங்களை யெல்லாம் தட்டிக் கழித்துக் கொண்டே வந்தாள்.

அருந்ததியின் போக்கைப் புரிந்து கொள்ள இயலாத ஆச்சி, அவளிடம் மனம் விட்டு ஒரு தினம் கேட்டாள்.

"பிள்ளை ஏனிந்தக் கலியாணம் வேண்டாமெண்டு சொல்லுறாயணை! நல்ல பொடியனாம். உத்தியோகமாக இருக்கிறானாம். நல்ல இடமாம். வாத்தியார் சொல்லுகிறார்.

"எனக்கு விருப்பமில்லை"

"ஏன் பிள்ளை விருப்பமில்லை.! இதைவிடப் பெரிய உத்தியோகம் பார்க்கிற மாப்பிளையைச் செய்யிறதெண்டால் எங்கடை இயல்புக்கு முடியாது. விரலுக்குத் தக்க வீக்கம் தானே இருக்கும்.!"

"நான் உத்தியோகத்தைப் பற்றி நினைக்கவில்லை..."

"அப்பென்ன பிள்ளை உன்ரை மனதுக்குள்ளை கிடக்குது. அதையாவது சொல்லன்! நீ இப்படியே கலியாணம் செய்யாமல் இருக்கப் போறியே மேனை! வயதெல்லே ஏறிக் கொண்டு போகுது!"

பார்வதி ஆச்சி இப்படியெல்லாம் எடுத்துச் சொன்ன போதும் அருந்ததி தன்மனதில் இருக்கும் எண்ணத்தை அவளுக்கு வாய் திறந்து சொல்லவே இல்லை.

மாணிக்க வாத்தியாருக்கும் அருந்ததியின் போக்கு விளங்கிக் கொள்வதற்கு இயலாத ஒரு புதிராகவே பட்டது.

காலமும் ஒவ்வொரு ஆண்டுகளாக கழிந்து போய்க் கொண்டிருப்பதால் அவள் திருமணத்தை விரைவில் நிறைவேற்றி வைத்துவிட வேண்டுமென்றே அவரும் அவசரப்பட்டார்.

அருந்ததியின் மறுப்புக்கான காரணம் என்னவாக இருக்குமென்று அவர் பல தடவைகள் சிந்தித்த போதே மன்மதராஜனின் நினைப்பு அவருக்கு வந்தது.

மன்மதராஜன் அவரிடம் படித்த மாணவன். அருந்ததியை விட ஒரு வகுப்பு அவன்மேலே படித்தவன். அருந்ததி படிப்பிலும் விளையாட்டிலும் எப்பொழுதும் முன்னுக்கு நிற்கின்றவளாகவே அவள் பாடசாலையில் இருந்தாள். மன்மதராஜனை அப்படிச் சொல்லிவிட முடியாது. அவன் விளையாட்டுத்துறையில் சிறந்த ஒரு வீரனாக விளங்கியவன். இருவரும் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் ஒரே இல்லத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஆண்கள் பிரிவில் அவன் இல்லத் தலைவனாக விளங்கியது போலவே பெண்கள் பகுதித் தலைவியாக அருந்ததி விளங்கினாள்.

பாடசாலைகளில் நடைபெறும் கலைவிழாக்கள் விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள்தான் மாணவ மாணவிகள் நெருங்கிப்போகும் சந்தர்ப்பங்களை உருவாக்கி தங்கள் உள்ளங்களை பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பினையும் அளித்து விடுகின்றனவே!

மன்மதராஜனுக்கும் அருந்ததிக்குமிடையில் அந்தக் காலத்தில் ஈடுபாடு இருந்து வந்ததை வாத்தியாரும் அவதானித்திருக்கிறார். அந்த உறவைப் பள்ளிக்கூட வாசலோடு முடிந்து போய்விடும் என்பதுதான் அவர் எண்ணமாக இருந்தது. மன்மதராஜனும் அந்த உறவு பவித்திரமாகப் பேணத்தகுந்த ஒருவனாக அவருக்குத் தென்படவில்லை.

"அவனைத்தான் இந்தப்பிள்ளை இப்போதும் நினைத்துக் கொண்டிருக்கின்றாளோ! என்ற எண்ணம் வாத்தியாரின் உள்ளத்தில் எழுந்தது.

வாத்தியார் தன் மனத்தில் எழுந்த சந்தேகத்தை முதலில் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பினார். மன்மதராஜனிடமோ அல்லது அவன் குடும்பத்தினரிடமோ இது பற்றிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆச்சியிடம் அவனைப் பற்றி எடுத்துச் சொல்லி அருந்ததியின் முடிவை எதிர்பார்த்திருந்தார்.

வாத்தியாரும் ஆச்சியும் பேசிக் கொண்ட மறுதினமே அருந்ததியிடமிருந்து அவருக்குச் சாதகமான பதில் ஆச்சிக்கூடாக கிடைத்தது. அவருடைய ஊகம் பொய்த்துப் போகாததில் அவருக்கு மகிழ்ச்சிதான். ஆனால் "இந்தப் பிள்ளை அவனை இப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறாளே"! என்று அவர் எண்ணும்போது மனத்திலெழுந்த வியப்புக்கு அளவேயில்லை. "அருந்ததி ..... அவள் பெயருக்கேற்ற குணமுள்ள அருந்ததிதான். கற்பின் சிகரந்தான்! என்று தமிழ் வாத்திமாருக்கே இயல்பான சொல்லுக்குப் பொருள் கண்டு சுவைக்கும் இயல்புடன் உள்ளத்துள் அவளை மெச்சிக் கொண்டார்.

வாத்தியார் அதன் பிறகே மன்மதராஜன் குடும்பத்தாருடன் கலியாணப் பேச்சுக்கால் வைத்தார். அவர்களும் வாத்தியாருக்கு அதிகம் பிசகு பண்ணாமல் அவருடைய எண்ணத்துக்கு இசைந்து வந்தார்கள்.

மன்மதராஜன் அருந்ததி திருமணம் முற்றான பின்னரே மன்மதராஜன் பற்றிய செய்திகள் ஆச்சியின் காதுக்கு வந்துவிழுந்தன. ஆச்சியின் குடும்பத்தின்மேல் அனுதாபமுள்ள சிலர், மன்மதராஜன் நடத்தை பற்றி ஆச்சிக்கு எடுத்துச் சொன்னார்கள்.

"பொடியன் ஒரு மாதிரி ஆச்சி. பிள்ளை தனிச்சவள். யோசிச்சுச் செய்யுங்கோ!"

"ஏன் என்ன சங்கதி!"

"இல்லை..... தெரிஞ்சதைச் சொல்லுறம். பிறகு துன்பப்படக் கூடாதெண்டு"

"ஒளியாமல் சொல்லுங்கோ! பொடியனிலை என்ன குறை!"

"ஆள் கொஞ்சம் அங்காலை இஞ்சாலை பார்க்கிறவராம். மேய்ச்சற்காரனாம்"

"ஓ..... அப்படியே சங்கதி!"

"பொல்லாத விடாக்கண்டன், பிடிவாதக்காரன்"

"அப்படியெண்டால் கனக்க யோசிக்க வேணும்"

ஆச்சி அவர்களுக்குச் சொல்லிவிட்டு, வாத்தியாருடன் இது பற்றி பேசினாள்.

வாத்தியாருக்கா அவனைப்பற்றித் தெரியாது! ஆனால் அருந்ததி வேறொரு மாப்பிள்ளையை ஏற்றுக் கொள்ள வேண்டுமே! "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்று மாத்திரம் அவருக்கு மனமாறச் சொல்லிக் கொள்ள முடிந்தது.

ஆரம்பத்திலிருந்தே அவனை விரும்பாத ஆச்சி அவன் இப்போது அருந்ததியைத் தனித்திருக்க விட்டுப் போயிருப்பது கட்டோடு பிடிக்கவில்லை. அதோடு அவளுடைய நகைகளையும் அவன் தொலைத்துவிட்டு போயிருக்கிறானே என்று நினைக்கும் போதெல்லாம்.....

"நான் சொன்னனான் ..... நான் சொன்னனான்..... வாழுற வளருகிற வயதில இந்தப் பிள்ளையை இப்படித் தனிச்சிருந்து தளம்ப விட்டிட்டு ..... நான் சொன்னனான்..... அப்பவே சொன்னனான்....." என்று வாய்க்குவாய் ஆச்சி இப்போது முணுமுணுத்துக் கொண்டிருகிறாள்.

6

அருந்ததிக்குத் தனிமை என்பது இப்போது பெருஞ்சோதனையாகிக் கனக்கிறது. அவள் திருமணத்திற்கு முன்பு இப்படி இனம் புரியாத ஒரு ஏக்கம் அவளைப்போட்டு வாட்டி வதைத்தில்லை. இன்று அவள் எல்லாம் இழந்து வெறுமை ஒன்றே எஞ்சி நிற்பதான மனக்குமைச்சல் அவளைக் குடைந்து குடைந்து அரித்துத் தின்று கொண்டிருக்கிறது. அவள் யாரைப் பார்க்க நேர்ந்தாலும் வெறுப்பு, எதற்கெடுத்தாலும் சிடுசிடுப்பு, சிலரைச் சந்திக்கும்போது பீதி, இப்படி இவைகளே இன்று அவளுக்கு வாழ்க்கையில் முந்திக் கொண்டு வருகின்றன.

வீடு விட்டு வெளியே சென்றால் மனதுக்குப் பல சங்கடங்கள் தேடிக் கொண்டு வந்து சேருகின்றன. மன்மதராஜனின் நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள் அவன் இப்போது ஊரில் இல்லையென்பதால் அவளை வீட்டுக்கு வெளியே எங்காவது சந்திக்க நேர்ந்து விட்டால் அவர்கள் நடந்து கொள்ளுகின்ற விதம் ..... அவள் கட்டுடலின்மேல் பசியோடு மேச்சலிடும் அவர்களின் அந்தப் பார்வை ..... அவள் முகத்திலே பெரும் அசூசையாகப் போட்டு உறுத்த உள்ளமும் உடலும் குறுகிப் போகின்றது.

அவளுக்குத் தான் இப்போது வேலி இல்லாத பயிராகவே தோன்றினாள். எந்தவொரு மேய்ச்சல் மாடும் எந்தவொரு சமயத்திலும் கடித்துக் குதறிவிட்டுப் போவதற்கு தயாராக இருப்பதாகவே அவளுக்குத் தென்படுகின்றது.

அவள் இன்று வாரத்தில் வெள்ளிக்கிழமை ஒருநாள் மாத்திரம் வெளியே சென்று மனதுக்குச் சாந்தி அளிக்கும் அந்தப் பிள்ளையாரை தரிசித்து விட்டு வருவது தவிர மற்றைய நேரம் முழுவதும் வீட்டுக்குள்ளேயே எப்போதும் முடங்கிக் கிடக்கிறாள்.

வாழ்வில் எந்தச் சுகங்களும் அவளைப் பொறுத்தவரையில் வீட்டு வேலிகளுக்கு வெளியில் இருப்பதான எண்ணம் இப்போது அவள் மனதில் இல்லை. எல்லாமே அவளுக்கின்று வீடுதான். வீட்டிலும் அவளுக்கப்படி என்ன பெரிய வேலை! தினவெடுத்துத் திமிறும் உடலை நீட்டி நிமிர்த்தி நெட்டி முறிப்பதும் உறக்கமில்லாது படுக்கையில் விழுந்து கிடந்து புரள்வதும், கணவன் படத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கண்கொட்டாமல் மணிக்கணக்காக ஆசை ஆசையாகப் பார்த்துக் கொண்டிருப்பதும், ஆச்சி அறியாத வண்ணம் தன் உணர்வுகளை எல்லாம் இரகசியமாகக் கண்ணீராக வடிப்பதுமே அவளுக்கு வாழ்க்கையாகிப் போய்விட்டது.

காலையில் எழுந்து தினமும் ஆவலுடன் தபாற்காரன் வரவை அவள் எதிர்பார்த்திருப்பாள். வாரத்தில் இரண்டு கடிதங்களாவது அவனிடமிருந்து தவறாமல் வந்து சேரும். அப்படி என்றாவது அவளின் எதிர்பார்ப்புக்குரிய தினத்தில் அவன் கடிதம் வருவதற்குத் தவறிப்போனால் அவள் திக்பிரமை பிடித்தவள் போல அவன் படத்தின் முன்னே போய் அமர்ந்து விடுவாள்.

அவளை மகிழ்விக்க வேண்டுமென்னும் நோக்கம் ஒன்றையே மனதிற்கொண்டு அவன் தவறாமல் அவளுக்குக் கடிதங்களை எழுதிக் கொண்டிருந்தான். மாதம் ஒரு தடவையாவது பல கோணங்களில் தனது வண்ணப் புகைப்படங்களை அவளுக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருப்பதற்கும் அவன் தவறவில்லை.

ஆனால் உண்மையில் அவன் இன்று தான் இருக்கும் நிலைமைகளை எல்லாம் அவளுக்கு கடிதத்தில் "பார்சல்" பண்ணி அனுப்பிக் கொண்டிருந்தால்......

அவள் முன் தான் எடுத்துக் கொண்ட சபதத்தை மனதிற் கொண்டு தன் சாதிக் கௌரவத்திற்கு இழுக்கான தொழில்களை செய்யக் கூடாதென்ற எண்ணத்தினால் இரகசியமாக கார் ஓட்டுவதற்கு கற்றுக் கொண்டதும் அவன் விருப்பம்போல அவனைச் சவூதிக்கு கார்ச்சாரதியாக அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி, பல ஆயிரம் ரூபாய்களை பெற்றுக் கொண்டு ஏஜென்சி பல மாதங்கள் அவனை ஏமாற்றி வந்ததையுமே அவளிடம் அவன் சொல்லிக் கொள்ளாதவன்.

"சிங்கப்பூருக்கு வந்து மொழி தெரியாத சீனர்களோடு சேர்ந்து காட்டுப்புறத்திலிருக்கும் பிரம்புத் தொழிற்சாலையொன்றில் வேலை செய்கிறேன். அரை அடி விட்டமுள்ள பதினைந்தடி நீளமான பிரம்புகளை பெரும்கட்டாகக் கட்டி தோளின்மேல் சுமந்து லொறிகளில் ஏற்றிவிடும் நாட்டாமையாக இருக்கிறேன்."

"தங்குவதற்கு இடவசதியும் உணவும் வழங்கப்படும் என்று ஆசை காட்டி எங்களை அனுப்பி வைத்த ஏஜென்சியால் ஏமாற்றப்பட்டு தொழிற்சாலையுடன் இணைந்து அதன் பின்புறத்திலிருக்கும் நூறுபோர்வரை

படுத்துறங்கினால் கொள்ளத் தகுந்த பாழ் மண்டபத்தில் நானும் என்னைப் போன்ற நாலு இலங்கை நண்பர்களும் வாழுகின்றோம்."

"கடல் கடந்து வந்து நிம்மதியாக படுத்துத் தூங்குவதற்கு ஒரு கட்டிலில்லாத அவல நிலையில் தரையிலே சாக்கை விரித்து பொலித்தீன் உறைகளில் பழைய காகிதங்களை அடைத்துத் தலையணையாக வைத்துக் கொண்டு மின்னாம் பூச்சி வெளிச்சத்தில் முடங்கிக் கிடக்கின்றோம்"

"சமயற்பாத்திரங்களைக் கைகளாலே தொட்டுப் பார்த்துமறியாத நானும் என் சகாக்களும் மூன்று வேளையும் சோறாக்கி உண்கிறோம்.

"சீனர்களுக்கு முப்பதைந்து வெள்ளியை மாதம் சம்பளமாகக் கொடுக்கும் இந்தத் தொழிற்சாலையின் முதலாளி எங்கள் கைகளில் பதினைந்து வெள்ளியை வீசிவிட்டு முப்பததைந்து வெள்ளிகள் பெற்றுக் கொண்டதாக கைச்சாத்திடுமாறு பணிக்கும்போது அதனையும் மறுக்காமல் பணிவுடன் செய்து வருகிறோம்".

"இலங்கை நாணயத்தில் முப்பத்தைந்து வெள்ளி என்பது மூவாயிரத்தைந்நூறு ரூபா"

"தொழிற்சாலையில் வேலைமுடிந்த மாலை நேரங்களில் மேலதிகமாகக் கல்லுடைக்கும் தொழில் செய்து சம்பாதிக்கின்றோம்.

அவன் இப்படியெல்லாம் உண்மைகளை எழுதி தன்னைத் தாழ்த்திக் கொள்வதற்கும் அவளைக் கண்கலங்க வைப்பதற்கும் விரும்பவில்லை.

அவன் எழுதும் கடிதங்கள் ஒவ்வொன்றும் அவளுக்கு ஒவ்வோர் தேன்நிறைந்த மலர்கள். எத்தனை

தடவைகள் அவற்றை அவள் படித்துப் படித்துச் சுவைத்திருக்கிறாள். அந்தக் கடிதங்கள் அனைத்துமே அவளுக்கு இப்போது மனப்பாடம். அவளின் படுக்கை அறையில் ஒருபுறம் அவன் புகைப்படம், மறுபுறத்தில் அவன் கடிதங்களை வைத்துப் பூசிக்கின்றாள். நடு இரவில் தூக்கம் கலைந்து அவள் கண்விழித்துக் கொள்ளும் சமயங்களிலும் அவன் கடிதங்கள் கிளுகிளுப்பாக அவளுடன் இன்பக் கதைகள் பேசுகின்றன. அவன் புகைப்படங்கள் உள்ளக் குறுகுறுப்புடன் அவளோடு இரகசியம் பேசிக் கொள்கின்றன.

"என்ரை இவர் நல்ல வடிவு சினிமா நடிகன் போலை" என்று தனக்குள்ளே சொல்லிச் சொல்லி நெஞ்சம் பூரிக்கின்றாள். "ஆனால் இவருக்கு என்னை..... என்ரை ஆசைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லையே..... என்ரை மனத்தை இவர் புரிந்திருந்தால் இப்படி....." என்று ஏங்கிக் கொண்டிருக்கும் அவள் உணர்ச்சிகள் ஊமையாகக் கிடந்து அவளை வாட்டுகின்றன.

அவன் சிங்கப்பூருக்கு இங்கிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு முதன்நாள் இரவு.....

அவள் விக்கி விக்கி அழுது கண்ணீர் சிந்துகின்றாள். "அரு..... அரு....." என்று சொல்லிக் கொண்டு அவளை அணைத்த வண்ணம் கண்ணீரைத் துடைத்து சமாதானம் பண்ண எத்தனிக்கின்றான் அவன். தன் மனத்திலெழுந்த சமாதானங்களை எல்லாம் சொல்லிச் சொல்லி அவள் மனப்பாரத்தைக் குறைத்து அவளைத் தேற்றுவதற்கு எண்ணுகிறான்.

அவனோடு பேசிக் கொள்வதற்கு மலையளவு எண்ணங்கள் தன் மனதில் குவிந்து கிடப்பது போல அவளுக்குத் தோன்றுகிறது. ஆனால் மனத்திலே தோன்றும்

அந்த எண்ணங்களை எல்லாம் அவளால் வாய் திறந்து பேசுவதற்கு இயலவில்லை. அவன் தன் மனத்தில் எழும் ஏக்கங்களையும் குமுறல்களையும் மீறி இதை மாத்திரம் அவனிடம் கேட்டாள்.

"நான் இல்லாமல் உங்களாலை இருக்க முடியுமா?"

"முடியும் அரு ... கலியாணத்துக்கு முந்தி நீ எனக்கு இல்லைத்தானே!"

அவன் சொன்ன இந்தப் பதிலைக் கேட்டு அவள் ஏமாந்து போனாள்.

"நீ இல்லாமல் என்னாலை இருக்கிறதுக்கு முடியாது. ஆனால் என்ன செய்யிறது..." என்றுதான் அவன் ஏங்குவானென அவள் எதிர்பார்த்தாள்.

"கலியாணத்துக்கு முந்தி எப்படியெல்லாம் நடந்து கொண்டாரோ! ஆனால் எனக்குக் கணவனான பிறகு..." என்ற எண்ணந்தான் அவள் மனதில் ஓடியது. அவனிடம் முகத்துக்கு முன்னே இதை எப்படிக் கேட்பது? என்ற தயக்கத்தினால் தன் மனத்தை அடக்கிக் கெண்டாள்.

அருந்ததிக்கு இன்னும் ஒரு மனக்குறை.

"நான் கேட்டதுபோல அவரும் ஒரு கேள்வியை என்னிடம் கேட்டிருக்க வேணுமல்லவா?"

அப்படி அவர் கேட்டிருந்தால் ஒரு வேளை நான் பதில் சொல்லாமல் அப்போது இருந்திருக்கலாம்.

இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன், நான் பதில் சொல்லி இருக்க வேணும். பதில் சொல்லி இருப்பேன்."

"எதற்கும் ..... அப்படி ஒரு கேள்வியை அவர் என்னிடம் கேட்கவே இல்லையே!"

பெண்ணென்றால் உள்ளமும் உணர்ச்சிகளும் இல்லாத வெறும் கல்லா?

"பொன்னும் பொருளும் மாத்திரமே வாழ்வென்றால் ஏனிந்த உயிரும் உணர்வுகளும் இருக்க வேணும்.!"

அடுத்தவனுடைய ஆடம்பரமான வாழ்வைக் கண்டு ஆசைப்பட்டு அதுமட்டுந்தான் வாழ்வு என்று நம்பி என்னை இப்படி ஏங்கித் தவிக்க விட்டு அவர் சிங்கப்பூருக்கு ஓடியிருக்க வேண்டியதில்லை. அவர் பணத்தைச் சம்பாதிக்கப் போயிருக்கும் இந்தச் சமயத்தில் அவருக்கும் எனக்கும் இடையே எவ்வளவு இழப்புக்கள். மீண்டும் அவரால் இழந்தவைகளைச் சம்பாதிக்கவா முடியும்!"

அவள் உள்ளத்தின் மென்மையான நுண்ணுணர்வுகள் சில சமயங்களில் இப்படிப் பேசிக் கொள்ளும். அவளுக்கு இப்போது பேச்சுத்துணை, கடந்த காலங்களை அசைபோட்டு மன்மதராஜனைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் அந்தமனந்தான்.

அவளுக்கும் மன்மதராஜனுக்கும் திருமணம் நடந்தேறுவதற்கு முன்பு மாணிக்க வாத்தியாரின் மகள் மணிமேகலை அவளைத் தேடிக்கொண்டு இடையிடையே வீட்டுக்கு வருவாள். மன்மதராஜன் அந்த வீட்டு மாப்பிள்ளையாக என்று வந்தானோ அன்றோடு அவளுடைய வருகையும் தடைப்பட்டுப் போனதற்குக் காரணமானவர் மாணிக்க வாத்தியாரே என்று அவள் உணர்வாள். வாத்தியார் மிகவும் கண்டிப்பான ஒரு பேர்வழி என்பது அவள் அறியாதவளல்லள்.

மணிமேகலையை நேருக்குநேர் சந்திக்கும் வேளைகளில் "என்ன வீட்டுப் பக்கமே ஆளைக் காணமுடியவில்லை?" என்று சில சமயங்களில் அருந்ததி கேட்பதுண்டு.

"எனக்குச் சோதனை வருதக்கா..... நிறையப் படிக்க வேணும்" என்று சொல்லிச் சமாளித்து அவள் தப்பித்துக் கொள்வாள். அருந்ததி வீட்டுக்கும் வாத்தியார் வீட்டுக்கும் இடையே இருப்பது ஒரேயொரு வேலிதான். யாழ்ப்பாணத்து அந்தப் பனையோலை வேலி வாத்தியாரைப் போலவே மிக இறுக்கமானது.

அந்த இறுக்கத்தையே மணிமேகலையின் மாற்றத்திலும் அவள் காண்கிறாள். வாத்தியார் மாத்திரம் ஓய்வாக இருக்கும் சில சமயங்களில் ஆச்சியைத் தேடிக்கொண்டு அங்கு வருவார். சுற்றுநேரம் ஆச்சியோடு இருந்து பேசிவிட்டு அருந்ததியையும் விசாரித்துக் கொண்டு அவர் போய்விடுவார். வாத்தியாரின் மனைவியும் அப்படித்தான். அவரைப்போல என்றைக்காவது ஒரு நாள் இருந்தாற்போல அங்கு வந்து போவாள்.

அந்த இரு வீடுகளுக்குமிடையில் தினமும் போய்வந்து புழங்கிக் கொண்டிருப்பவர்கள் இருவர் மாத்திரந்தான்.

ஒருவர் பார்வதி ஆச்சி.

அடுத்தவர் வாத்தியாரின் மகன் மனோரதன்.

## 7

மனோரதன் மாணிக்கம் வாத்தியாரின் சிரேஷ்ட புதல்வன் மாத்திரமல்லன். அவன்தான் ஏகபுத்திரன். வாத்தியார் மிகவும் கண்டிப்பாக இருந்து எல்லாக் காரியங்களையும் கவனித்த போதும் அவன் கல்வியில் அவர் கருதியிருந்தது போல அவனை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு மட்டும் அவருக்கு முடியவில்லை. ஒவ்வொரு பெற்றோரும் கற்பனை பண்ணுவது போல, தன்னைவிடத் தன்பிள்ளை உயர்ந்து மேல் நிலைக்கு வரவேண்டுமென வாத்தியார் எதிர்பார்த்தார். அவனை எப்படியும் பல்கலைக்கழகம்வரை அனுப்பி, ஒரு பட்டதாரியாகக் காணவேண்டுமென்றே அவர் கனவு கண்டார். இன்றைய கல்விக் கடைகளான ரியூசன் நிலையங்களை வேம்பாக வெறுக்கின்ற வாத்தியார், எப்படியும் அவனை உருவாக்கிப் போட வேண்டும் என்னும் அவாவினால் ரியூசன் நிலையங்களுக்கு ஏராளமான பணத்தை தண்ணீர் போலப் பெருகி ஓடவிட்டும் இறுதியில் அவர் ஏமாந்தே போனார்.

பல்கலைக்கழகத்துக்குள்ளே தான் அவன் நுழைய முடியவில்லை. அவனைப் போன்று ஏமாந்தவர்களிற் பணம்

படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இறுதியாகச் சரணடையும் கணக்காளர், சட்டத்தரணிப் படிப்புக்களிலாவது எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் ஈடுபடுத்தலாமென்றாலும், அவனுக்கந்த துறைகளில் அவ்வளவாக நாட்டமிருக்கவில்லை. அவன் விரும்பாத ஒரு கல்வித்துறைக்குள் அவனை வலிந்து ஈடுபடுத்தினால் அதிலும் தான் ஏமாந்து போக நேருமே என்று வாத்தியார் மனம் குழம்பினார். அவனை வேறு எத்துறையில் ஈடுபடுத்தி வளர்த்தெடுக்கலாம் என்பதே சில காலமாக வாத்தியார் உள்ளத்தைப் போட்டுக் குடைந்து கொண்டிருக்கும் ஒரே சிந்தனை.

மனோரதன் கல்வியைத் தொடரமுடியாமல் அது தடைப்பட்டு இடையில் நின்று விட்டாலும் அவன் ஊர்சுற்றி வம்பளக்கும் காரியங்களிற் காலத்தைப் போக்காத வண்ணம் மிகக் கடுமையாக வாத்தியார் இருந்து வந்தார். அவர் என்னதான் கண்டிப்பாக இருந்த போதும், அவன் வாட்டசாட்டமான தலை வளர்த்த இருபது வயது இளைஞனாக இருக்கும் ஒரே காரணத்தினால் அவருக்குத் தொல்லையைக் கொண்டுவந்து சேர்த்து விட்டான்.

ஒரு தினம் யாரோ நண்பர்களைக் காணப் போவதாக வீட்டில் சொல்லிக் கொண்டு போனவன் மறுபடி வீட்டுக்குத் திரும்பி வரவில்லை. அவன்வேறு எதுக்குந்தான் உதவாது விட்டாலும் கடைசிக் காலத்தில் தன் கொள்ளிக்காவது இருந்துவிட்டுப் போகட்டும் என்று கையறு நிலையில் எண்ணிக் கொண்டிருந்த வாத்தியார் அவனைக் காணவில்லையே என்றதும் உள்ளம் இடிந்து பதைத்துப் போனார்.

பொலீஸ் நிலையங்களுக்கெல்லாம் இரண்டு தினங்களாக ஓடியோடி அலைந்து விசாரித்தும், அவரால் எந்தவிதமான தகவலையும் அறிந்து கொள்வதற்கு முடியவில்லை. இறுதியாக இராணுவ முகாமுக்கு அச்சத்துடன் ஓடினார். ஆங்கும் இரண்டுநாள் அலைச்சலின் பின்னர்தான் மனோரதன் இராணுவமுகாமில் சந்தேகத்தின் பேரிற் கைது செய்து வைக்கப்பட்டிருப்பதான தகவலை அறிந்து கொண்டார்.

அதன் பிறகு ஆறுமாத காலம் அவர் பட்ட கஷ்டங்களும், செய்த செலவுகளும் கொஞ்ச நஞ்சமல்ல.

மனோரதனை வீட்டுக் கொண்டு வந்து சேர்த்தவுடன் அவர் செய்த முதல் வேலை அவனுடைய சுருண்ட அழகிய ஹிப்பித் தலை முடியை வெட்டும்படி செய்ததுதான்.

வீட்டைவிட்டு வெளியே இனிமேல் அவன் எங்குமே போகக் கூடாதென்ற கடுமையான கட்டளையையும் அவர் அன்றே பிறப்பித்துவிட்டார்.

அவனுக்கு வீடே சிறைக்கூடமாகி வாழ்வுபெரும் பாரமாக மாறியது. உண்பதும் உறங்குவதுந் தவிர வேறுவேலைகள் எதுவுமே இல்லாது சுத்தோதனால் உலகின் துயரங்களை அறியாத வண்ணம் பாதுகாப்பாக வளர்க்கப்பட்ட சித்தார்த்தன் போலச் சிறைப்பட்டான்.

அலுப்பும் சலிப்பும் மிகுந்த தன் வாழ்க்கையில் பொழுதுபோக்காகப் புத்தகங்கள் சஞ்சிகைகள் வாசிப்பதை அவன் தனது வழக்கமாக்கிக் கொண்டான். தமிழ் நாட்டிலிருந்து புற்றீசல்கள் போல் வெளிவரும் மாதமொரு நாவல் எவையுமே அவன் கண்ணிற்படாமல் தப்பிக் கொண்டவைகளாகப் போய்விடவில்லை. அவனுக்கு மிக அண்மையில் வாழும் நண்பர்கள் சிலரிடம் இரவலாக

அவற்றை வாங்கிப் படித்ததுடன், தானும் சிலவற்றைப் பணம் கொடுத்து வாங்கினான்.

அவன் இந்த வழியிலாவது தனது நேரத்தைப் போக்கட்டும் என்று மனதிற் கருதிய வாத்தியார், அவன் எதனை வாசிப்பதற்கும் தடையாக இருக்காது தாராளமாக விட்டுக் கொடுத்து நடந்து கொண்டார்.

அவனைப் போலவே பொழுதுபோக்குவதற்கு வேறு வழியேதுமில்லாது தவித்துக் கொண்டிருப்பவள்தானே அருந்ததி.

அவன் தனக்கு கிடைக்கும் புத்தகங்கள், சஞ்சிகைகள் ஒவ்வொன்றையும் தான் படித்து முடித்ததும் அவளுக்கு கொண்டுவந்து கொடுப்பான்.

அவள் அந்த வெளியீடுகளின் அட்டைப் படங்களைப் பார்த்துச் சிலசமயங்களில் தன்னை அறியாமலே முகஞ்சுழிப்பதுண்டு. பெண்ணின் உடலை வியாபாரப் பொருளாக்கி இலாபந்தேடும் இழிவான செயலைக் கண்டு அவள் உள்ளம் வேதனைப்படுவதுண்டு. ஆனால் தனக்கும் பொழுது போக வேண்டுமென்ற ஒரே நோக்கத்தினால் "உள்ளே என்னதான் எழுதியிருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்" என்று ஒவ்வொரு தடவையும் அவற்றை வாசித்துப் பார்ப்பாள். அவற்றின் அட்டைப்படங்களைப் போலவே ஆண்பெண் உறவின் அந்தரங்க விஷயங்களைப் பச்சை பச்சையாக எழுதியிருப்பது கண்டு வேதனையும் வெட்கமும் அடைவாள். கணவன் பிரிவினால் குமுறிக் கெண்டிருக்கும் அவள் உள்ளத்தில் அந்த நாவல்கள் உள்ளூர மதுவின் வெறிபோல மேலும் மேலும் உள்ளக் கிளர்ச்சியை ஊட்டிக் கொண்டிருக்கும். கணவன் மன்மதராஜன் பற்றிய யௌவன நினைவலைகளை அவள்

உள்ளத்தில் புயல்போலக் கிளப்பி அமைதியின்றி மனம் அலையச் செய்யும்.

சில சமயங்களில் அவள் மனோரதனைக் கேட்க நினைப்பதுண்டு.

"மனோ ..... இதெல்லாம் என்ன புத்தகங்கள்? இதுகளையெல்லாம் ஏன் நீ படிக்கிறாய்"

ஆனால் அவனிடம் போய் இப்படிக் கேட்டுவிட்டால் அந்த மலிவு நாவல்கள் எழுத்தோவியங்களாக விபரித்து வைத்துக் கொண்டிருக்கும் விரசமான விஷயங்கள் பற்றியுமல்லவா அவனுடன் பேசிக் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைமை வந்து சேரும்.

அவள் தனக்கு அப்படியொரு நெருக்கடியை உண்டுபண்ண விரும்பாததால் அவைபற்றி அவனோடு பேச்சே எடுப்பதில்லை.

மனோரதன் என்றாவது இருந்துவிட்டு ஒருதினம் அவளிடம் கேட்பதுண்டு.

"எப்படி அக்கா நாவல்?"

அவன் கேட்கும் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று அறியாமல் அவள் விழிப்பாள்.

விரசமான இந்தக் குப்பைகளை நல்லதென்று அவனைத் திருப்திப்படுத்துவதற்காக வேனும் சொன்னால் அவன் தன்னைப் பற்றி தவறாக மதிப்பீடு செய்து கொள்வானே என்றெண்ணி அஞ்சுவாள்.

படுமோசமென்று மட்டமாகச் சொல்லிவிட்டால் அவற்றைக் கொண்டு வந்து தருகின்ற அவன் முகம் கறுத்துவிடுமே என நினைத்துத் தயங்குவாள்.

இந்தச் சிக்கல்களையெல்லாம் மனதில் நினைத்துக் கொண்டு மழுப்பலாக 'ஏதோ கதை போகுது' என்று மட்டும் சொல்லி ஒருவாறு சமாளித்து தப்பித்துக் கொள்வாள்.

அருந்ததிக்கு இப்போது பொழுது போக்குவதற்கென்றே வீட்டில் ரீவியும் வந்துவிட்டது.

அவன் கணவன் மன்மதராஜன் சிங்கப்பூரிலிருந்து இங்கு வந்த தன் நண்பன் ஒருவன் மூலம் அவளுக்காகவே அதனைக் கொடுத்தனுப்பி இருக்கிறான்.

அவன் கொடுத்த அறிவித்தலுக்கு இணங்க வீட்டுக்கு மின்விளக்குகளும் இன்று பொருத்தப்பட்டு விட்டன.

அவள் வீட்டுக்கு செய்துமுடிக்க வேண்டியிருக்கும் இந்தக் காரியங்கள் அனைத்திற்கும் அவளுக்குத் துணையாக இருந்து நிறைவேற்றி முடிப்பவன் மனோரதன்தான். அவன் அவளை விடவும் வயதில் மூன்று ஆண்டுகள் இளையவனாக இருந்தாலும் அவன் ஆண்பிள்ளை. அவனைப்போல வெளியே சென்று பார்க்கக் கூடிய காரியங்களையெல்லாம் அவளால் செய்து முடிப்பதற்கு இயலுமா?

மன்மதராஜன் சிங்கப்பூருக்குப் புறப்பட்டபோது அவனை வழியனுப்பி வைப்பதற்கு அருந்ததி இங்கிருந்து கட்டுநாயக்காவுக்கு செல்ல விரும்பினாள். இப்போது நாடு இருக்கும் நிலையில் அவளை வீட்டளவில் நிறுத்திவிட்டுச் செல்வதையே அவன் பெரிதும் விரும்பினான். ஆனால் அவன் என்ன சொல்லியும் அருந்ததி கேட்பதாக இல்லை. அவனுடைய பிரிவுத் துயரை எண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் அவளின் திருப்திக்காக அவளையும் கொழும்புக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து விமான நிலையம்வரை வந்து வழி அனுப்பி வைப்பதற்கு அவன் சம்மதித்தான்.

அவள் அங்கிருந்து ஊருக்குத் திரும்பிவரும்போது ஒரு துணையில்லாது தனித்து அவளால் பிரயாணம் செய்வதற்கு இயலாது. அதனால் அந்தச் சமயத்திலும் அவளுக்குத் துணையாகப் போய்வந்தவன் மனோரதன்தான்.

8

மன்மதராஜன் சிங்கப்பூருக்குச் சென்று வருடம் ஒன்று பெரும் சுமையாக மெல்லக் கழிந்து போய்விட்டது. வெளிநாட்டு உழைப்பின் விளைவாக யாழ்ப்பாணத்து வீடுகளில் இன்று மின்னிக் கொண்டிருக்கும் பகட்டான மாற்றங்கள் சில அந்த வீட்டிலும் பளிச்சிடுகின்றன.

ஆனால் பார்வதி ஆச்சியின் மனம்மட்டும் இந்தப் பகட்டுக்கள் எதனையும் கண்டு இன்னும் ஆறிப் போய் விடவில்லை.

மன்மதராஜன் சிங்கப்பூரிலிருந்து அழகான சேலைகள் பலவற்றை அனுப்பி வைத்திருந்தான். அந்த சேலைகளுடன் மனோரதனுக்கும் ஆச்சிக்கும் உடுப்புக்கள் அனுப்பி இருக்கிறான். மனோரதன் அவன் அனுப்பி வைத்திருக்கும் அந்த உடைகளையே பெருமையுடன் மிக விரும்பி இன்று அணிந்து கொண்டு திரிகிறான்.

ஆச்சிக்கு அவன் அனுப்பிய அந்த இரண்டு சேலைகளையும் அருந்ததி கையில் எடுத்து வந்து "இது அவர் உனக்கனுப்பி இருக்கிறார் அம்மம்மா" என்று சொல்லிக் கொண்டு ஆச்சியிடம் நீட்டினாள்.

"எனக்கென்னதுக்கு மோனை..... நீ கொண்டேவை" என்று மறுத்த ஆச்சி, இன்னும் அந்த உடைகளைத் தன் கையாலும் தொட்டுக் கூடப் பார்க்கவே இல்லை.

"நான் சொன்னான்..... நான் சொன்னான்....." என்று மாத்திரம் என்றும்போல மனம் உளைந்து இன்றும் அவள் சொல்லிக் கொண்டே இருக்கின்றாள்.

"ஈடுவைச்ச நகைகள் ஈட்டிலை கிடந்து மாளுது. இந்தக் காலத்திலை வட்டி குடுத்த சந்ததியும் வாழுமே! வாழுற வளருற வயதிலை இப்படியொரு பிள்ளை கிடந்து சீரழியுது. நான் கண்மூடிறதுக்கு முந்தி ஒரு குஞ்சு குருமனைக் காணலாமெண்டால்" என்று தன்பாட்டிலே அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாள்.

ஆச்சியின் மனப்புகைச்சல் வார்த்தைகளாக வாயிலிருந்து வெளிப்படுவதற்கு ஆரம்பித்து விட்டால் அருந்ததிக்கு அவற்றைக் கேட்பது உள்ளத்துக்குச் சங்கடமாகவே இருக்கும். அப்படியான சமயங்களில் ஆச்சியின் புறுபுறுப்புக்கள் தன் காதில் விழாத வண்ணம் அவள் மெல்ல ஒதுங்கிக் கொள்வாள்.

இன்றும் ஆச்சி "நான் சொன்னான் நான் சொன்னான்" என்ற வாய் திறப்பதற்குள்ளே, அருந்ததி வீட்டுக்குள்ளிருந்து வெளியே வீட்டுவாசலுக்கு விரைந்து வந்து விட்டாள். ஆச்சிக்குக் கதைக்குக் கதை கொடுக்காமல் விலகிக் கொண்டு அவளைத் தனிமையில் விட்டு விட்டால் ஆச்சி தானாகவே ஆறிப்போய்விடுவாள்.

அருந்ததி வாசலுக்கு வெளியே வந்து, கதவில் சாய்ந்த வண்ணம் வாசற்படியில் மெல்ல அமர்ந்து கொண்டாள்.

அந்த வீட்டுக்கு மின்விளக்குகள் இணைப்பதற்கு முன்னர், இரவு வேளைகளில் இப்படி வந்து வாசலிற் குந்தி இருப்பதென்றால் அவளுக்கு ஒரே அச்சம். ஆச்சி என்னதான் சொல்லிச் சொல்லிக் கொதித்துக் கொண்டிருந்தாலும்

அதற்குக் காது கொடுத்த வண்ணம் வீட்டுக்குள்ளேயே ஒதுங்கிக் கொண்டு இருக்க வேண்டி இருக்கும். இப்போது அந்த வீட்டு எல்லைக்குள்ளே தனித்து இருப்பதில் அவளுக்கு என்ன பயம்.!

அந்த வீடும் அதன் சுற்றுப்புறமும் முற்றமும் நடுப்பகல்போல மின்சார வெளிச்சத்தில் ஜொலிக்கிறது.

அந்த ஒளி வெள்ளத்தில் நனைந்து குளித்த வண்ணம் கதவின் மேல் ஆயாசமாக மெல்லச் சரிந்திருக்கும் அருந்ததியின் உள்ளத்தில் மட்டும் வெளிச்சமில்லை. வீட்டுக்கு ஒளி கொடுக்கும் மன்மதராஜனின் வெளிநாட்டு உழைப்பு அவள் உள்ளத்தில் ஒளி ஏற்றி வைப்பதற்கு இயலவில்லை. அவன் சிங்கப்பூருக்கு போகாமல் இருந்திருந்தால் வீட்டிலே ஒளிர்ந்து கொண்டிருக்கும் அந்த ஒளியானது நிச்சயம் அங்கு இல்லாமல்தான் இருந்திருக்கும். ஆனால் அவளுடைய உள்ளம் இப்படிச் சுடுகாடாக இருண்டு போய்க் கிடக்காது. மாறாக அங்கே ஒளி வெள்ளம் பொங்கி எழுந்து பிரவாகித்துப் பாயும்.

இப்போது மன்மதராஜனின் கடிதங்களும் முன்போல அடிக்கடி வந்து கொண்டிருப்பது வெகுவாகக் குறைந்து போய்விட்டன. அவளுடைய இரண்டு மூன்று கடிதங்களுக்குப் பிறகுதான் அவன் ஒரு கடிதம் எழுதுவான். வாரத்தில் இன்ன இன்ன நாட்களில் தவறாது அவன் அனுப்பி வைக்கும் கடிதம் வருமென்று அவள் எதிர்பார்த்திருந்து அவற்றை ஆவலுடன் தபாற்காரனிடமிருந்து பெற்றுக் கொண்டதுபோல இப்போது கடிதங்கள் அவள் கைக்கு வந்து சேருவதில்லை. என்றாவது ஒருநாள் இருந்தாற்போல் ஒரு கடிதம் வந்து சேரும்.

முன்பெல்லாம் அவன் எழுதும் கடிதங்கள் அவளைப் பற்றிய கடந்த காலத்து இனிய நினைவுச் சௌந்தரியங்களை சுமந்து கொண்டு வரும் பொன்னேடுகளாகவே இருந்தன.

இன்று அவன் வரையும் கடிதங்கள் சிங்கப்பூரின் ஆடம்பரமான கேளிக்கைகள் பற்றிய தகவல்களையே தாங்கிக் கொண்டு வந்தன.

அதுவும் விசேஷமாகப் பெண்கள் சம்பந்தமான தகவல்களாகவே இருந்தன.

"இது ஒரு குட்டி அமெரிக்கா, அமெரிக்கா நாகரிகத்தில் மூழ்கிப் போன நாடு. அரசாங்கத்தின் அனுமதியுடன் இங்கு விபசார விடுதிகள் நடத்தப்படுகின்றன. பத்து வெள்ளி, பதினைந்து வெள்ளி, ஐம்பது வெள்ளி என்று பெண்களின் தரமுண்டு."

சிங்கப்பூர் பற்றி மாத்திரமல்ல, மலேசியா பற்றிய தகவல்களையும் அவன் கூசாமல் எழுதிக் கொண்டிருக்கிறான்.

"டஸ்கா றோட்டில் பத்தொன்பது வீடுகள்" ஜோகூர் றோட்டில் பதினோரு வீடகள், இங்கே இலங்கைக்காரிகளும் தைவான் பெண்களும் இருக்கிறார்கள். தைதை பெங்ரெஸ்ருரென்சில் துகிலுரி நடனங்களைப் பார்க்கலாம். இங்கே இலங்கைப் பெண்களும் இந்தியப் பெண்களும் ஆடுகிறார்கள். ஒரு ரெலிபோன் அழைப்புடன் ஒரு மணித்தியாலம் கழிவதற்குள் ஒரு சினேகிதியைப் பிடித்துக் கொள்ளலாம். காத்தோங் பிள்ளையார் கோவிலில் அல்லது புனிதமரம் பாலசுப்பிரமணியர் கோயிலில் அல்லது மாரியம்மன் கோயிலில் ஒரு வெள்ளி அல்லது செவ்வாய் மாலைப் பொழுதைக் கழித்தால் ஒரு நல்ல அழகிய இளம் பெண்ணை சிநேகிதியாக அடையலாம்".

இந்த விபரங்கள் அனைத்தும் இவ்வளவு தெளிவாக அவனுக்கு எப்படித் தெரிய வந்தன என்பதே அவள் உள்ளத்தில் இப்பொழுது எழுந்துள்ள ஒரே கேள்வி.

"இதுகளையெல்லாம் அவர் எனக்கேன் எழுத வேணும்! தான் விரும்பியபடி பெண்களை அடைந்து சுகம் அநுபவித்துக் கொண்டிருக்கிறேன் என்று எனக்குச் சொல்லாமல் சொல்லுகிறாரோ!"

அவன் இங்கிருந்து புறப்படுகின்ற சமயத்தில் அவள் அவனிடம் கேட்டாளே ஒரு கேள்வி.

"நான் இல்லாமல் உங்களாலை இருக்க முடியுமா?"

அந்தக் கேள்விக்கான விளக்கம்தானா இந்த விபரங்கள்.?

இவைகளை இன்று நினைக்கும்போது ஆலய வழிபாடு இப்போது அவள் உள்ளத்திற்கு ஆறுதல் அளிப்பதாக இல்லை. அந்த ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் விக்கினேஸ்வரன் கூடத் தன்னை கைவிட்டு விட்டதாகவே அவள் கருதினாள்.

"பெண்களைப் பற்றி வேண்டாத அருவருப்பான விபரங்களையெல்லாம் எழுதிக் கொண்டிருக்கும் அவர், நானுமொரு பெண் என்பதையல்லவா ஒரு தடவை நினைத்துப் பார்க்க வேண்டும். விலைமாதர்கள் பற்றித் தகவல் தந்து கொண்டிருக்கும் அவர், குடும்பப் பெண்ணான என்னுடைய மனச்சுமைகளையும் எண்ணியல்லவா பார்க்கவேணும். நானென்ன உயிரும் உணர்வுமற்ற வெறும் கல்லா? மண்ணா? அம்மம்மாவின் மனப்புகைச்சல் எவ்வளவு நியாயமானது?"

அருந்ததியின் உள்ளம் ஓரிடத்தில் நிலைகொள்ளாது அவளை அறியாது அலைக்கழிந்து அந்தரித்துக் கொண்டிருந்தது.

அவள் மனம் குழப்பத்தில் மூழ்கித் தவித்துக் கொண்டிருந்ததால், மனோரதன் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தது கூட அவளுடைய கவனத்தை ஈர்க்கவில்லை.

"என்னக்கா இதிலை தனிய இருக்கிறியள்?" அவள் முன்னே நின்று, அவன் கேட்டபோதுதான் அவனை அவள் கவனித்தாள்.

"இரவு வேலையில்லை, சும்மா இருக்கிறன்"

அருந்ததி ஏதேதோ சிந்தனையில் மனதை அலைய விட்டுக் கொண்டிருந்தவள், கொஞ்சங்கூடச் சிந்திக்காமல் வாயில் வந்த வார்த்தைகளை, அவன் முகத்தை அப்போதுதான் நிமிர்ந்து பார்த்த வண்ணம் உள்ளத்தில் துளியும் களங்கமில்லாது கூறுகிறாள்.

அவன் முகம் பட்டென்று மாறுகிறது.

அவள் விழிகளுள் கூர்மையான அவன் பார்வை நுழைந்து என்றுமில்லாத வண்ணம் எதனையோ தேடுகிறது.

அடுத்தக் கணம் தலையைக் கவிழ்த்துக் கொண்டு கதவைத் தாண்டி அவன் வீட்டுக்குள்ளே போய்விடுகிறான்.

ஆச்சி இதுவரையும் பாடிக் கொண்டிருந்த ஓலம் அடங்கி எங்கோ ஒரு ஒதுக்கில் போய்ச் சாய்ந்து விட்டாள்.

கூடத்துள்ளே வந்து கதிரை ஒன்றில் தொப்பென்று அமர்ந்து கொண்ட அவன் உள்ளம் நிலைகொள்ளாது தவிக்கிறது.

"இவ என்ன சொல்லுறா? வேலையில்லை, சும்மா இருக்கிறன்..... அப்படியெண்டால்.....?"

"இதையேன் எனக்குச் சொல்ல வேணும்? அப்படியெண்டால்.....!"

"இவவிட்டையே போய்....."

"நான்பேசாமல் உள்ளே வந்திருக்க கூடாது. அங்கே நிண்டிருந்தால் வேறை ஏதும் கேட்டிருப்பா!"

"ஒரு பெண் எப்படிப் பச்சையாக தன் விருப்பத்தை மனந்திறந்து சொல்ல முடியும்! இப்படித்தான் தன்ரை ஆசையைச் சொல்லாமற் சொல்லுவார்கள்".

"நான் இவ்வளவு காலமும் உணராமலல்லவா இருந்து விட்டேன்"

இப்படியெல்லாம் நினைத்து நினைத்து மனம் குழம்பிக் கொண்டிருந்த மனோரதன், அவளை நாடிப் போவதற்குத் தீர்மானித்துக் கொண்டு கதிரையை விட்டு மெல்ல எழுந்தான்.

9

மனோரதனின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. கை கால்கள் மெல்லப் பதறின. அவளைத் தேடிக் கொண்டு வீட்டு வாசலுக்குச் செல்வதற்கு எண்ணி அவன் கதிரையை விட்டு எழுந்தபோதும் ஒரு அடிதானும் அவனால் எடுத்து வைப்பதற்கு இயலவில்லை. வாய் உலர்ந்து நாவரண்டு போனது. அவள் அருகே சென்று தன்னால் ஒரு வார்த்தையேனும் பேசுவதற்கு இயலுமோ என்ற சந்தேகம் அவன் மனதில் எழுந்தது.

"நான் நினைக்கிறதுபோல அவ இல்லாது விட்டால்....." என்ற சந்தேகம் அவன் இதயத்தின் ஏதோ ஒரு முனையிலிருந்து மெல்ல அரும்பிய போது மீண்டும் கதிரையில் மனம் தளர்ந்து உட்கார்ந்தான்.

தாபமும் தவிப்பும் ஒரு புறமும், அச்சமும் தயக்கமும் மறுபுறமாக அவன் உள்ளத்தை ஊஞ்சலாட்டித் தலைசுற்றச் செய்தன.

மனோரதனின் பார்வையிலும் முகத்திலும் உண்டான திடீர்மாற்றத்தை அருந்ததியும் அவதானித்துக் கொண்டபோதே தான் செய்த தவறு அவளுக்குப் புரிந்தது. தான் சாதாரணமாகச் சொன்ன வார்த்தைகளுக்கு அவன் தவறான அர்த்தம் கற்பித்துக் கொண்டு விட்டானே என்று நினைத்து அவள் உள்ளூர வருந்தினாள்.

“நான் அப்பிடி நினைத்துச் சொல்லவில்லை” என்று எழுந்து போய் உடனடியாக அவனுக்குச் சொல்ல வேண்டும் போல அவளுக்குத் தோன்றுகிறது. ஆனால் இதற்குப் போய் அவனுக்கு விளக்கம் சொல்வதற்கு முற்பட்டால் அவன் தப்பாக எதை நினைக்கின்றானோ அதைப்பற்றியல்லவா அவனுடன் பேச வேண்டிவரும் எண்றெண்ணி தயங்கினாள்.

இப்போது எதிர்பாராத விதமாக உருவாகியிருக்கும் இறுக்கமான சூழ்நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கான ஒரே வழி அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவதுதான் என்று நினைத்துக் கொண்ட அவள், வாசலிலிருந்து எழுந்து மண்டபத்துக்குள்ளே அடியெடுத்து வைத்தாள்.

மனோரதன் கதிரையிற் சாய்ந்து கண்களை மூடித் தவமிருப்பதைக் கண்டதும் அவளுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது.

“பேய்ப் பொடியன். ஏதோ நினைச்சுக் கொண்டு ... நீ வீட்டுக்குப் போ என்று எப்படி நான் சொல்லுகிறது!” என்று எண்ணிச் சில கணம் தயங்கினாள்.

அவனைப் பார்த்து ‘வீட்டுக்குப்போ’ என்று சொல்லுவதிலும் பார்க்க தனக்கு உறக்கம் வருகிறது என்று நாகரிகமாகச் சொல்லி அவனை இங்கிருந்து அனுப்பி வைத்துவிடலாமென்று கருதிக் கொண்டு “நான் படுக்கப் போறன் மனோ.....” எனக் கூறிய வண்ணம் தனது படுக்கை அறைக்குள் அருந்ததி புகுந்தாள்.

அவள் குரல் கேட்டுக் கண்களைத் திறந்த மனோரதன் அவள் தன் அறைக்குள் நடந்து செல்வதைத் தலையைத் திருப்பி அவள் பின் அழகை ஏக்கத்துடன் நோகிப் பெருமூச்செறிந்தான்.

“இவ படுக்கப்போறன் எண்டு இப்பவேன் எனக்குச் சொல்ல வேணும்? என்ற சந்தேகம் அவன் மனதில் புதிதாக எழுந்தது. “ஒரு வேளை என்னையும் உள்ளே வரவேண்டுமெண்டு.....” என்ற நினைப்பு மனத்தில் உதித்த போது தாபம்..... அவன் மனதில் தீயாக எரிய ஆரம்பித்தது.

“நானும் எழுந்து உள்ளே.....” என்ற எண்ணம் மனதில் தலை நீட்டியதும், அவ்வாறு செய்வதற்கு அஞ்சி மீண்டும் கண்களை மூடிய வண்ணம் கதிரையில் சாய்ந்து கொண்டான்.

அவனால் ஒரு முடிவுக்கு வருவதற்கு இயலாமல் குழம்பிக் கொண்டு சிறிது நேரம் அங்கே இருந்தவன் திடீரென எழுந்து தடுமாறிய வண்ணம் வேகமாக வெளியே நடந்தான்.

அவன் அங்கிருந்து எழுந்து செல்வதை உணர்ந்த அருந்ததி அறையைவிட்டு வெளியே வந்து முன்புறக் கதவை படாரென்று மூடித் தாழ்ப்பாளைப் போட்டுக் கொண்டாள்.

மறுதினம் வங்கிக்குப் போக வேண்டிய தேவையொன்று அருந்ததிக்கு இருந்தது. இந்த சமயங்களிளெல்லாம் அவளை வங்கிக்கு அழைத்துச் செல்கின்றவன் மனோரதன்தான். வங்கியில் ஆகவேண்டிய காரியங்கள் அனைத்தையும் அவனே செய்து முடித்துக் கொண்டு மீண்டும் அவளை வீட்டுக்கு அழைத்து வருவான். சில நாட்களில் பஸ் வண்டியில் ஏறி இருவரும் போய்வருவார்கள். அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு ஒரு மைல் தூரம் நடந்து சென்று பிரதான றோட்டுக்கு வந்தே பஸ் வண்டியைப் பிடிக்க வேண்டும். நடந்து செல்வதற்கு சிரமமாகத் தோன்றும் நாட்களில் அவளைச் சயிக்கிளில் ஏற்றிக் கொண்டு அவன் போவான்.

முதல் நாளே வங்கிக்குப் போக வேண்டிய தேவை இருப்பதை அவள் மனேரதனிடம் சொல்லியிருந்தாள். அப்படியான சமயங்களில் அவன் வீட்டுக்கு வந்து "அக்கா வெளிக்கிடட்டே? என்று கேட்டுக் கொண்டு போய் அவளுடன் செல்வதற்கு தயாராகத் திரும்பி வருவான்.

இன்று அவன் இரவு அங்கிருந்து சென்ற பின்னர் மீண்டும் அங்கே இன்னும் வரவேயில்லை. அவன் வழமைபோல காலையில் அங்கு வராததினால் அவளும் மிக ஆறுதலாகவே புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளுடன் செல்வதற்கு அவன் வராதிருந்து விட்டால் அவனைத்தான் வலிந்து அழைக்கக் கூடாதென்று அவள் மனதில் தீர்மானித்துக் கொண்டாள். அவனுடைய துணை இல்லாமல் தானே தனித்துச் சென்று செய்து முடிக்க வேண்டிய காரியங்களைச் சிரமப்பட்டேனும் நிறைவேற்றிக் கொண்டு திரும்புவதற்கே அவள் எண்ணி இருந்தாள்.

அவள் வங்கிக்குப் போய் வருவதற்குத் தயாராகப் புறப்பட்டுக் கொண்டு அறையிலிருந்து வெளியே வந்தபோது மனோரதன் அறைக்கு வெளியே மண்டபத்துள் கதிரையில் அமர்ந்திருப்பது கண்டு அவள் வியந்து போனாள்.

எப்போதும் அவன் அங்கே வரும்போது "அக்கா....." என்று அவளுக்குக் குரல் கொடுத்துக் கொண்டு வருவதுதான் அவனுடைய வழக்கம். இன்று அவன் பூனைபோல வந்து, தங்கி இருப்பதைக் கண்டு அவளுக்கு மனத்திலே சிரிப்பு மூண்டது.

அவளோடு சேர்ந்து வெளியே செல்லும் சமயங்களில் எல்லாம் அப்போது அவன் அணிந்து கொள்ளும் உடையும் இன்று போட்டுக் கொள்ளவில்லை.

"அக்கா, அண்ணன் அனுப்பின சிங்கப்பூர்ச்சாறியைக் கட்டிக் கொண்டு வா அக்கா! நானும்

சிங்கப்பூர் உடுப்புத்தான் போட்டுக் கொண்டு வரப்போறன்" என்று அவளுக்குச் சொல்லி சிங்கப்பூர் உடையை வற்புறுத்தி உடுத்துக் கொள்ளச் செய்கின்றவன் அவன். இன்றைக்கும் அவன் அப்படித் தன்னோடு வந்தால், அதைத்தான் சொல்லுவான் என்று எண்ணியே மன்மதராஜன் அனுப்பி வைத்த சேலைகளுள் ஒன்றை எடுத்துக் கொண்டாள்.

ஆனால் அவன்..... வழமையான சிங்கப்பூர் உடையில் இன்று வரலில்லை.

"ஒரு இரவுக்குள்ளேயே இவன் இவ்வளவு மாறிப்போனானே! என்று நினைத்து மனம் வருந்திய அவள், தொடர்ந்து அவன் இப்படியே நடந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை வளர்க்க விரும்பாது முன்னர் இருந்த சகச நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென எண்ணி "மனோ போவம்" என்றாள்.

அவன் கதிரையிலிருந்து எழுந்து அவளைத் திரும்பிப் பார்க்காமலே வெளியே நடந்து சென்று, முற்றத்தில் நிறுத்தி வைத்திருக்கும் சயிக்கிளை எடுத்துக் கொண்டான்.

"சயிக்கிள் வேண்டாம். பஸ்ஸிலே போவம்." என்று அவனைப் பின்தொடர்ந்து வந்த அவள் தடுத்தாள்.

"பஸ்ஸுக்கு காத்துக் கொண்டு நிற்கேலாது. எனக்கு வேலை இருக்கு. சொல்லிக் கொண்டு அவன் சயிக்கிளை உருட்டிய வண்ணம் படலையைத் திறந்து தெருவுக்கு வந்து சேர்ந்தான். அவளும் அவனைத் தொடர்ந்து தெருவுக்கு வந்து சேர்ந்ததும் அவன் சயிக்கிளில் ஏறிச் "சீற்"றில் அமர்ந்த வண்ணம் ஒரு காலை

நிலத்தில் ஊன்றி 'பாரில்' அவள் தொத்திக் கொள்வதற்கு ஏற்றவாறு நின்று கொண்டான்.

அவள் சயிக்கிளில் ஏறிக் கொண்டதும் சயிக்கிள் மெல்லப் புறப்பட்டது.

அவளை சயிக்கிளில் இப்படி ஏற்றிக் கொண்டு போகும் சமயங்களில் தனது கை, கால்கள் கூட அவள்மீது பட்டுக் கொள்ளாத வண்ணம் மிக நிதானமாகவே அவன் சயிக்கிள் ஓட்டுவான்.

ஆனால் இன்றோ முன்பு ஒருபோதும் இல்லாதவிதமாக "சீற்"றின் நுனியில் அவன் உட்கார்ந்து கொண்டுசயிக்கிளைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

அவளுடைய இடுப்பில் அவனுடைய உடல் பட்டும்படாமலும் உராய்ந்து கொண்டிருந்தது.

அவன் சற்று விலகி பின்புறமாக நிலைகொண்டு அமருவானென்றே சிறிது தூரம் செல்லும்வரை அவள் எதிர்பார்த்தாள். அப்படி எதுவும் நடக்கவில்லை. தான் சற்று முன்புறமாக நகர்ந்திருப்பதற்கும் அவளுக்கு வசதியில்லை. தலையைக் குனிந்த வண்ணம் கொஞ்சதூரம் செல்லும்வரை பொறுமையாக இருந்த அவள், திடீரென்று தலையைத் திருப்பி அவன் முகத்தை ஒரு தடவை குறிப்பாக பார்த்து விட்டு மீண்டும் தலை குனிந்து கொண்டாள்.

அவள் இருந்தாற்போல அப்படிப் பார்த்தபோது அவளுடைய அந்தப்பார்வையை எதிர்கொள்ள முடியாத அவன் தலை குனிந்து கொண்டானேயொழிய அவனுடைய இருக்கையில் எந்தவிதமான மாற்றமுமில்லை.

இரண்டு மைல் தூரம் அந்த உறுத்தல் அவளுடைய இடையில் தொடர்ந்து இருந்து கொண்டே வந்தது.

இருவரும் வங்கியில் சென்று இறங்கினர். அங்கும் தேவையை ஒட்டி மாத்திரம் அவன் தட்டுத் தடுமாறிய வண்ணம் அவளுடன் சில வார்த்தைகள் பேசினான். தங்கள் இருவருக்கும் இடையில் கனத்துக் கொண்டிருக்கும் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு வழமைபோல அவனோடு மனந்திறந்து பேசுவதற்கு அவளுக்கும் இப்போது முடியவில்லை.

வங்கியில் செய்தாக வேண்டிய காரியங்கள் அனைத்தும் அவன் செய்து முடித்தான். மீண்டும் இருவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

அவன் முன்னர் போல இன்னும் நெருக்கமாக ..... அவனைப் பார்த்து "கொஞ்சம் பின்னுக்கு அரக்கி இரு....." என்று சொல்வதற்கு அவள் பல தடவைகள் மனத்தில் உன்னினாள். ஆனால் அப்படிச் சொல்வதற்கு இயலாமல் எதுவோ ஒன்று அவளைத் தடுத்தது. அந்தத் தயக்கமும் அவளுடைய மௌனமும் அவன் உள்ளத்தில் மேலும் தெம்பைக் கொடுத்திருக்க வேண்டும்.

அவன் மேலும் மேலும் நெருக்கமாக.....

அவன் தயங்கித் தயங்கித் தவித்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவள் தெளிவாகப் புரிந்து கொண்டாள்.

இப்படிச் சயிக்கிளில் போய்வரும் சமயங்களிலெல்லாம் அவன் வாய் ஓயாமல் எதையாவது பேசிக் கொண்டே வருவான். சிறுபிள்ளைகளுக்கு ஊர்காட்ட அழைத்துச் செல்கின்றவர் போல ஒவ்வொன்றையும் சுட்டிக் காட்டி விளக்கம் கூறிக் கொண்டிருப்பான்.

இன்று புதிய ஒரு மனிதனாக மாறி, அவன் வாய்திறக்கவே இல்லை.

இருவரும் பிரதான வீதியைக் கடந்து கிராமத்துக்குள் நுழைந்து அவள் வீட்டுப் படலையை வந்து அடைந்தார்கள்.

சயிக்கிள் படலையை வந்தடைந்ததும் அவள் கீழே இறங்குவதற்கு வசதியாக ஒரு காலை நிலத்தில் ஊன்றிய வண்ணம் அவன் தரித்து நின்றான்.

அவள் சயிக்கிளிலிருந்து மெல்ல இறங்கினாள். நீண்டதூரம் சயிக்கிள் பாரில் தொத்திக் கொண்டிருந்ததால் உடனே காலெடுத்து வைத்து நடப்பதற்கு இயலவில்லை. பாதங்களை மெல்ல ஊன்றி நிமிர்ந்த வண்ணம் அவன் முகத்தை சாடையாகக் கவனித்தாள்.

அவன் முகம் வழமைபோல இல்லை. அந்த முகத்தின் கலகலப்பும் ஆனந்தமும் செத்துப் போய்விட்டன. முகத்திலே வறண்டுபோன ஒரு காய்வு, எதனையோ பறிகொடுத்து விட்டது போன்ற ஒரு ஏக்கம், முதல்முறையாக மேடை ஏறுகின்றவனுக்கு வரும் தயக்கமும் தடுமாற்றமும்.

அவள் முகத்தை ஏறெடுத்துப் பார்ப்பதற்கு இயலாமல் அவன் தடுமாறிக் கொண்டு நிற்கிறான்.

இருவரும் ஒருவரை ஒருவர் தலைநிமிர்ந்து முகம் பார்க்க இயலாதவர்களாக தலை குனிந்து மௌனமாகச் சில கணங்கள் சிலையாகி நின்றார்கள்.

அவள் என்றும் போல இன்றும் அவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டு போவதற்கே எண்ணினாள். ஆனால் அது அவளுக்கு முடியவில்லை.

அவனோடு எப்படிப் பேசுவது என்பதறியாமல் சில கணங்கள் அவள் குழம்பிக் கொண்டு நின்றாள். பேசாமற் போய்விடுவதும் சரியாக அவளுக்குப் படவில்லை. என்னதான் பேசுவதென்பதும் புரியவில்லை. இறுதியா "நீ இப்ப கடுக்கண்டு விட்டாய்" என்று மாத்திரம் திடீரென்று சொல்லிக் கொண்டு வேகமாகப் படலையைத் திறந்து விரைவாக உள்ளே நடந்தாள்.

## 10

மனோரதன் முன்போலக் கைகளை வீசிக்கொண்டு இப்போது அங்கு வருவதில்லை. அவன் தயங்கித் தயங்கியே அங்கு வந்து போய்க் கொண்டிருந்தான். அவன் வருகின்ற சமயங்களில் யாரையும் அழைத்துக் கொண்டு வரும் வழக்கம் தடைப்பட்டுப் போய்விட்டது. எப்போதாவது "ஆச்சி" என்று மாத்திரம் மெல்லக் குரல் கொடுப்பான். முன்பெல்லாம் "அக்கா" என்றே அருந்ததிக்கு குரல் கொடுத்துக் கொண்டு அவன் அங்கு வருவது வழக்கம். அந்த வழக்கம் இன்று முற்றாகவே இல்லாமற் போய்விட்டது. அவள் முகத்தை நிமிர்ந்து பார்ப்பதே இன்று அபூர்வம். அவள் தன்னைக் கவனிக்காத சமயங்களில்தான் அவன் கண்களை அகலத் திறந்து அவளை நன்றாகப் பார்த்துக் கொள்ளுகிறான்.

ஒரு புதன் கிழமை. அவள் வீட்டுக்கு வெளியே இருந்தவள். அன்றுதான் தலைமுழுக வேண்டிய தினம். அப்படியான தினங்களில் அவள் தலைமுழுகுவதற்கு மனோரதன் கிணற்றிலிருந்து நீர் அள்ளிக் கொடுத்து உதவி செய்வதுண்டு. அன்றும் அவள் தன்னை உதவிக்கழைப்பாள் என்றே அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அவனுடைய உதவியை அவள் நாடவில்லை. பார்வதி ஆச்சியே அருந்ததிக்கு நீர் அள்ளி ஊற்றினாள். ஆச்சி பாவம். தளர்ந்துபோன வயதில் அவளால் கிணற்றிலிருந்து வேகமாக நீர் இழுப்பதற்கு இயலவில்லை. அதனால் அருந்ததி தலைமுழுகி முடிப்பதற்குள் பத்து மணிக்கு மேலாகிவிட்டது.

அவள் நீராடி முடித்தபின் கூந்தலை நன்றாக முறுக்கி, பின்னர் அதனைத் தொங்க விட்டு சிறுதடி கொண்டு ஈரமடித்துத் துடைத்து, உடைகளை மாற்றிக் கொண்டு அவிழ்ந்த கூந்தல் முழந்தாள்வரை நீண்டு தோகைபோல் விரிந்து அழகூட்ட கூடத்து மேசையில் அமர்ந்து காலை உணவை உண்டு கொண்டிருந்தாள்.

அப்போது முன்புறத்து வாசல் வழியாக மனோரதன் உள்ளே வந்து கொண்டிந்தான். கூடத்தில் உட்கார்ந்து உணவு அருந்திக் கொண்டிருக்கும் அவள் தன்னைக் கண்டு கொள்ளவில்லை என்ற துணிச்சலில் அவளையே தன் விழிகளால் விழுங்கிக் கொண்டு நின்றான்.

தற்செயலாக அந்தப் பக்கம் திரும்பிய அவளுக்கு அவனுடைய அந்தப் பார்வை உள்ளூர எரிச்சலை மூட்டுகிறது. அவள் தன் மனத்திலிருந்த வெறுப்பையும் ஆத்திரத்தையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், “என்ன புட்டுத்தாறதே!” என்று வெடுக்கென்று கேலியாக கேட்டு விடுகிறாள்.

“ஓ ..... தந்தால் தின்னுவன்” என்று சொல்லிக் கொண்டு அவளை நெருங்கி வந்த அவன் அவள் கொஞ்சமும் எதிர்பார்க்காத விதமாக அவள் உண்டு கொண்டிருக்கும் கோப்பையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு தான் தின்ன ஆரம்பித்தான்.

அவன் இப்படி நடப்பான் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை. அவனுடைய இந்தச் செயலைக் கண்டு என்ன செய்வதென்று அறியாமல் அவள் திகைத்துப் போயிருந்தாள்.

அடுக்களைக்குள்ளிருந்து அப்போது வெளியே வந்த ஆச்சிக்கு அருந்ததியின் சாப்பாட்டுக் கோப்பையை அவன் கையில் இருப்பது கண்டு பேய் அறைந்தது போல் முகம் மாறியது. பார்வையாற் சுட்டெரிப்பது போல அவனை ஏற இறங்கக் கடுமையாகப் பார்த்து வெறுப்புடன் திரும்பவும் அவள் சமயலறைக்குள்யே நுழைந்து கொண்டாள்.

அவன் கோப்பைக்குள்ளிருந்து பிட்டில் சிறிய துண்டொன்றைப் பிய்த்தெடுத்து தன் வாயில் போட்டுக் கொண்டு திரும்ப அந்தக் கோப்பையை அவள் முன்னே வைத்தான்.

திக்பிரமை பிடித்தவளாக திகைத்துப் போயிருந்த அருந்ததி படாரென்று கோப்பையைக் கையால் தூக்கிச் சென்று அடுக்களைக்குள் போட்டுவிட்டு கையைக் கழுவிக் கொண்டாள்.

அதன் பிறகு அன்று பகல் முழுதும் அவன் அந்தப்பக்கம் தலை காட்டவே இல்லை.

அருந்ததியின் உள்ளம் முற்றாகவே குழம்பிப் போயிற்று. ஒரு கணம்கூட அந்த மனதுக்கு அமைதி இல்லாது தவித்தது. அந்த நெஞ்சத்தின் குமுறல்களுக்கு வடிகால்தேட வழியில்லாது ஏக்கமும் அச்சமும் அழுத்தின. இதயம் வேதனையாற் பொருமி வெந்து வெடித்து விடும் போலத் தோன்றியது.

இப்படியே கிடந்து வேதனையாற் கணந்தோறும் அழிந்து கொண்டிருப்பதிலும் பார்க்க இதயம் வெடித்துச்

சிதறி உயிர்மூச்சு அடங்கி விட்டாலும் நல்லது என்று அவள் எண்ணத் தொடங்கினாள்.

அவள் எந்தத் திசையை நோக்கினாலும் இப்போது மன்மதராஜன் உருவம் தன்முன்னே நிற்பதான ஒரு பிரமையின் மயக்கம். அவனைப் பற்றி இதற்கு முன் எப்போதுமே அவள் இந்த அளவுக்கு எண்ணி எண்ணித் துயரப்பட்டதில்லை. அவள் உள்ளத்திலிருந்து ஒரு கணப்பொழுதேனும் அவன் நீங்காமல் உள்ளமும் உணர்வும் அவனாகவே நிறைந்து நின்றான்.

அன்று அவளுக்கு உணவு செல்லவில்லை. கோப்பையிற் சோற்றைக் கிள்ளிப் போட்டுக் கொண்டு தின்று முடித்து விட்டதாக ஆச்சிக்குப் போக்குக் காட்டினாள்.

ஆச்சிக்கு அவள் இப்போதும் குழந்தைதான். அவள் அதிகம் சாப்பிடவில்லையென்றால், "மோனை ... மோனை... கொஞ்சம் தின்னெணை ... கொஞ்சந் தின்னெணை ..." என்று சொல்லிக் கொண்டு தானே அவளுக்கு உணவூட்டவும் தொடங்கி விடுவாள். ஆனால் ஆச்சி இன்று அவளை அப்படிவற்புறுத்தவே இல்லை. எப்போதும் அவளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் ஆச்சி, அவளோடு அதிகம் பேசிக் கொள்ளாது ஒதுங்கி இருந்தாள்.

அருந்ததி ஆச்சியின் முகத்தை நிமிர்ந்து பார்ப்பதற்கே தயங்கினாள். அவளோடு பேசுவதற்கும் அவளுக்கு அச்சமாக இருந்தது. இனம் புரியாத பீதியினால் ஆச்சியிடமிருந்து ஒதுங்கி ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தாள் அவள்.

இரவு எட்டு மணியானதும் நெஞ்சக் குமுறலுடன் கட்டிலில் போய் விழுந்தாள் அருந்ததி. அவள் கட்டிலுக்கெதிரே பெரிய அளவிலான மன்மதராஜன்

புகைப்படம் ஒன்று சுவரில் தொங்குகிறது. அவள் கட்டிலின்மேல் நிமிர்ந்து படுத்த வண்ணம் அவன் படத்தை இமைகொட்டாமல் பார்த்துக் கிடக்கிறாள். அவள் கண்களிலிருந்து கன்னியாய் வெந்நீர் ஊற்றெடுத்து இரு கன்னங்களிலும் வழிந்தோடி தலையணையை நனைத்து ஈரமாக்கிக் கொண்டிருக்கிறது. நீண்ட நேரமாக அவ்வாறு படுத்துக் கிடந்து கண்ணீர் விட்ட அவள் படுக்கையிலிருந்து எழுந்து கட்டிலின் மேல் குந்தியிருந்த வண்ணம் சிங்கப்பூரிலிருந்து மன்மதராஜன் அனுப்பி வைத்திருக்கும் அவனது வண்ணப் புகைப்படங்களின் 'அல்பத்தை' மெல்லப் புரட்டுவதற்கு ஆரம்பித்தாள். அந்த 'அல்பத்தின்' பக்கங்கள் ஒவ்வொன்றாக புரண்டு கொண்டிருக்கும்போது மன்மதராஜனின் படங்களுக்கு அவள் கண்ணீரால் அபிஷேகம் செய்து கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரத்துக்குள் அவள் எல்லாப் படங்களையும் பார்த்து முடித்தாள். இதுவரை எத்தனை தடவைகள் அவனைப் பார்த்துப் பார்த்து ஏங்க வைத்த படங்கள்.!

அந்த அல்பத்தை மூடிக் கட்டிலின்மேல் வைத்து விட்டு நாடியிற் கைகொடுத்த வண்ணம் தலையைத் தூக்கி வீட்டுக் கூரையை நோக்கி வெறித்துக் கொண்டிருந்தாள்.

"எனக்கேனிந்த வேதனை? இந்த நெருக்கடி..... எல்லாம் அவராலே..... அவர் என்ரை சொல்லைக் கேட்டிருந்தால்..... என்ரை நிலமையைப் புரிந்திருந்தால்..... இப்படியெல்லாம் நானேன் நெருக்குவாரப்பட வேணும்!"

அவளைப் போட்டு இப்படி அலட்டிக் கொண்டிருக்கும் மனத்துக்கு அவளால் ஆறுதல் தேடிக் கொள்வதற்கு முடியவில்லை.

அவள் நேரத்தைப் பார்க்கிறாள். மணி ஒன்பதாகிக் கொண்டிருக்கின்றது. இன்று ரீ.வி யில் தமிழ்ப்படம் என்பது அவள் நினைவுக்கு வருகிறது.

"அதையாவது கொஞ்ச நேரம் பாப்பம்" என்று நினைத்துக் கொண்டு கட்டிலிலிருந்து எழுந்து வெளியே வருகின்றாள்.

அப்போது மனோரதன் முன் வாசல் வழியாக உள்ளே வந்து அவள் முன் நிற்கிறான்.

அவனைக் கண்டதும் அவள் திகைத்துப் போகிறாள்.

இன்று அவன் வரவை அவள் எதிர்பார்க்கவேயில்லை.

அவன் வழமையாக ஒவ்வொரு புதன் இரவும் ரீ.வி பார்பதற்காக அங்கு வருகின்றவன்தான். ஆனால் இன்று அவன் வரமாட்டான் என்றே அருந்ததி நினைத்திருந்தாள். எதிர்பாராதவிதமாக அவன் வந்திருப்பது கண்டு அவள் நெஞ்சம் துணுக்குற்ற போதும் "எப்பவும் வாறவன்தானே....." என்று நினைத்துத் தன்னைத்தானே சமாதானம் பண்ணிக் கொண்டாள்.

கூடத்துச் சுவரோரமாக சிறிய மேசை ஒன்றின்மேல் ரீ.வி வைக்கப்பட்டிருந்தது. மனோரதன் தானாகவே முன்வந்து ரீ.வி யை இயக்கிவிடுவதுதான் அவன் அங்கு இருக்கின்ற வேளைகளில் நடைபெறும் வழக்கம். ஆனால் இன்று ரீ.வி யைப் பார்ப்பதற்குத் தயாராகக் கதிரை ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு வசதியாக உட்கார்ந்து கொண்டான்.

அருந்ததி ரீ.வி.யை இயக்கி விட்டுக் கொண்டு, இன்னொரு கதிரை ஒன்றை எடுத்து அவனுக்குச் சற்றுத் தள்ளிப் போட்டுக் கொண்டு அதில் அமர்ந்தாள்.

"இந்தக் காலத்துப் பெட்டைகளெல்லாம் சினிமாக்காரராகத்தானே போச்சுதுகள்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் ஆச்சிக்கு ரீ.விக்கு முன்னுக்குக் குந்தியிருக்கப் பிடிக்காது. அவள் சினிமாவிற்காக ஏன் காத்திருக்கப்ப போகிறாள்? சமையல் அறைக்கு அடுத்த அறையில் சென்று படுத்து உறங்கி விட்டாள்.

ரீ.வி யில் சினிமா ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு கிளப் நடனம். அந்த நடனக் காட்சியில் அன்றைய விடலைப் பருவத்து இளசுகளின் கனவுக் கன்னியாக விளங்கும் சிலுக்குத் தோன்றுகிறாள். ஆடை என்ற பெயரில் அவள் உடலில் ஒட்டிக் கொண்டிருக்கும் அரைகுறை மறைப்புகளோடு, விம்மிப் புடைத்துத் திமிறி நிற்கும் தன்னுடல் தசைகளை வளைத்து நெளித்து குலுக்கி அசைத்து ஆடுகிறாள்.

மனோரதன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அந்தக் காட்சியை ஆவலுடன் பார்ப்பதும், அருந்ததியை நோக்குவதுமாக அவன் தவித்துக் கொண்டிருக்கிறான்.

அவனைக் கடைக்கண்ணால் நோட்டமிட்ட அருந்ததிக்கு அவனுடைய அவஸ்தை புரிகிறது.

"எப்பதான் இந்த ஆட்டக்காரியின் கூத்து முடியப் போகிறதோ!" என்று அவள் மனம் தவித்துக் கொண்டிருக்கிறது.

ஒருகால் மணிநேரம் வரை சிலுக்கின் குலுக்குதல் அவள் உள்ளத்தைப் போட்டு உலுக்கிக் கொண்டிருந்தது. அந்தக் காட்சி மாறியதும் அவள் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

அதன் பிறகு காதல் சிட்டுக்களான கதாநாயகனும் கதாநாயகியும் சந்திக்கும் ஒரு காதல் காட்சி. அந்தக்

காட்சியோடு இணைந்து இருவரும் சேர்ந்து பாடுவதான நெஞ்சங்களைத் தொட்டுக் கிள்ளி இழுத்து நெகிழ்விக்கும் பாடலொன்று தேனாக ஒலிக்கிறது.

மனோரதனின் உள்ளம் சினிமாவில் இலயிக்கவில்லை.

அவனது வெறி கொண்ட பார்வை அருந்ததியின் பக்கமாகத் திரும்பி.......

அவளால் அதற்கு மேல் சகிக்க முடியவில்லை.

அவள் படாரென்று அங்கிருந்து எழுந்து தனது அறைக்குள்ளே வேகமாகப் புகுந்து கட்டிலின்மேல் அமர்ந்து மன்மதராஜனின் படத்தைப் பார்த்துத் தேம்பித் தேம்பி அழுகிறாள்.

மனோரதன் சிறிது நேரத்தின் பின்னர் அவள் அறைக்குள்ளே மெல்லத் தயங்கித் தயங்கி வந்து நுழைகின்றான். அவள் முகத்தை அச்சத்துடன் நோக்குகின்றான். அவன் கை, கால்கள் மெல்ல நடுங்குகின்றன. நெற்றியிலே வியர்வை அரும்புகின்றது. தொண்டை வரண்டு நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்கிறது. இதயம் வேகமாக அடித்துக் கொள்கிறது. வெப்பமான சுவாசக் காற்று இரைந்து கொண்டு வெளிவருகிறது.

அவள் தலைகுனிந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றாள்.

அவன் மெல்லக் குனிந்து இரு கரங்களினாலும் அவள் முகத்தைத் தூக்கி கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டு அவள் தோள்களை இறுகப் பற்றிய வண்ணம் கட்டிலின்மேல் அமர்ந்து கொள்ளுகிறான்.

11

பார்வதி ஆச்சி இப்போது முற்றாக மாறிப் போனாள். அவள் தனக்குள்ளேயே எப்போதும் புறுபுறுத்துக் கொண்டிருப்பது அவளுடைய வாழ்க்கையாகிப் போய்விட்டது. அருந்ததியோடும் அதிகம் பேசிக் கொள்வதற்கு அவள் விரும்புவதில்லை. மனோரதனைக் கண்டால் அவளுக்கு ஒரே வெறுப்பு. அவன் வீட்டிற்கு வருவதை அவள் உள்ளூர வெறுத்தாள். அவன் வீட்டுக்கு வரும்வேளைகளிலெல்லாம் அவளுடைய முகமும் பார்வையும் மனத்திலுள்ள வெறுப்பை வெளிக்காட்டும்.

"நீ இஞ்சை இனிமேல் வரவேண்டாம்" என்று அவனுக்கு சொல்ல வேண்டுமெனப் பலதடவைகள் அவள் மனத்தில் எண்ணியதுண்டு. ஆனால் எப்படி அவனுக்கு இதைச் சொல்லாம், என்ன நியாயத்தைச் சொல்லி அவன் இங்கு வருவதைத் தடுக்கலாம் என அவளுக்கு விளங்கவேயில்லை.

அவனும் முன்போல பல தடவைகள் இப்போது வந்து போவதில்லை. அப்படி அவன் அங்கு வந்தாலும் நீண்ட நேரம் தரித்திருப்பதில்லை.

அவனோடு மனம் விட்டுப் பேசுவதற்கு அங்கு யார் இருக்கிறார்கள்?!

அருந்ததியா!

ஆச்சியா!

அந்த வீடு புதியவொரு நெருடலான சூழ்நிலைக்குத் திடீரென்று மாறிப்போயிற்று. அவர்களில் யாருமே ஒருவரோடு ஒருவர் மனந்திறந்து அதிகம் பேசிக் கொள்ளாதவர்களாக மாறிப் போனார்கள். எல்லோரும் மனத்தினுள்ளே வெளியிடுவதற்கு இயலாத ஊமை உறுத்தல்களால் அலைக்கழிக்கப்பட்டு உள்ளுக்குள் அழுகிக் கொண்டிருந்தார்கள். நன்றாக வேகாத சோறு போல ஒருவருடன் ஒருவர் ஒட்டிக் கொள்ளாது வெறும் இயந்திரங்களாக நடமாடினார்கள்.

அருந்ததி முன்போலத் தேவைகளுக்குக் கெல்லாம் அவனைக் கூப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கைவிட்டு விட்டாள். ஆனால் முற்றாக அவனை ஒதுக்கி வைத்து மற்றையவர் மனங்களில் சந்தேகம் உருவாவதையும் அவள் தவிர்த்துக் கொள்ள எண்ணினாள். என்றாவது இருந்தாற்போல் ஒரு தினம் அவனிடம் ஏவல் சொல்லிச் செய்வித்துக் கொள்வாள்.

மன்மதராஜன் இப்போது அவளுக்குக் கடிதமெழுதுவதை வெகுவாகக் குறைத்துக் கொண்டான். அவன் நீண்ட பல நாட்களுக்குப் பின் என்றாவது ஒரு தினம் எழுதுகின்ற கடிதமும் அவளோடு ஒட்டாமல் வெகுதூரம் விலகியே இருந்தது. சிங்கப்பூர் பற்றிய புதினங்கள் ..... பெண்கள் சம்பந்தப்பட்ட தகவல்கள்தானும் இப்போது அவன் எழுதுவதை நிறுத்திக் கொண்டு விட்டான். ஏதோ கடமைக்காக வேண்டா வெறுப்பாகவே அவன் சில வரிகள் எழுதினான்.

மனோரதன் சில மாதங்கள் இராணுவ முகாமில் விசாரணைக்கென்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த செய்தியை அவள் வாயிலாக அவன் அறிந்த பின்பு, அவன் நிலைமைகளை விசாரித்தும் இடையிடையே முன்னர் எழுதுவான். இப்போது மனோரதன் பெயரையே அவன் மறந்தும் எழுதுவதில்லை.

அவன் சிங்கப்பூர் சென்று இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இனிமேல் அவன் ஊருக்குத் திரும்பி வரவேண்டும். என்றே அருந்ததி எதிர்பார்த்தாள். ஆனால் அவன் மேலும் இரண்டு ஆண்டுகள் அங்கு தங்கப் போவதாக அவளுக்கு ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான்.

அவ்வாறு அங்கு தங்குவதை அவள் கொஞ்சமும் விரும்பவில்லை. கட்டாயம் ஊருக்கு வாருங்கள் என்று கேட்டுத்தான் அவள் எழுதிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் வேண்டுகோளுக்கு அவனிடமிருந்து எந்தவிதமான தெளிவான பதிலும் அவளுக்கு வந்து சேரவில்லை.

இந்த இரண்டு வருட காலத்தில் படிப்படியாக அவனிடம் உண்டான மாற்றங்களை அவள் உணர்ந்தபோது வெளியிற் சொல்ல முடியாத வேதனையால் உள்ளம் வெந்தது.

அவள் மனதில் ஒரு சந்தேகம்.

"அவருக்குச் சிநேகிதனெண்டு இருக்கும் எவனாவது எதையாவது எழுதி இருக்கலாம்"

"அப்படி எழுதி இருந்தால் அவர் திரும்பி வந்த பிறகு நிச்சயம் குடும்பத்தில் ஒரு புயல் வீசும்".

"நான் அவருக்கு என்ன சொல்லப் போறன்?"

"வேறு என்ன சொல்வது.....!

"வாழ்க்கை என்பது உண்மை, நிஜம். நிழல்கள், ஒருபோதும் நிஜங்களாவதில்லை. நான் இருப்பது உண்மையென்றால் எனக்கென்றொரு வாழ்க்கை

இருப்பதும் உண்மை. வாழ்வின் சுகங்களை அனுபவிக்கத் துடிக்கும் என் இளமை உணர்வுகளை உணராமல் நிழலையே நிஜம் என்று கருதும் அவருக்காக நான் என்ன செய்யலாம்! என்னை இந்த நிலைக்குத் தள்ளியவர் அவர்தானே! அவருக்கொருவேளை இந்த வாழ்க்கை அவர் வாழ்ந்து முடித்துவிட்ட வாழ்வின் நிழலாக இருக்கலாம். வெறும் பகட்டும் ஆடம்பரமுந்தான் வாழ்வென்று நினைக்கும் அவரால், என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை!.

என்னுடைய தேவைகளை உணர்ந்து கொள்வதற்கும் முடியவில்லை. சமூகம், ஒழுக்கம், கட்டுப்பாடு என்றெல்லாம் போலியான வேலிகளைப் பெண்களுக்கு மட்டும் போட்டு வைத்துக் கொண்டு இரகசியமாக உள்ளே புகுந்து மேய்ந்து செல்லும் மிருகங்களை அறிந்தும் . அறியாதவர்கள் போல அனுமதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அரபு நாட்டுக்கு மனைவியை வீட்டு வேலைக்காரியாக அனுப்பி வைத்துவிட்டு, இங்கு காத்திருக்கும் கணவன் அவளிடம் எதை எதிர்பார்க்கின்றான்? பணத்தை மாத்திரந்தானே! மனைவியை இங்கே தவிக்க விட்டு பணம் சம்பாதிக்கப் போகின்றவனும் வேறு என்னத்தை எதிர்பார்க்கலாம்? இந்தப் பொய்மைகளில் நான் வாழவியலாது இந்த மண்ணையே இன்று இந்தப் பொய்மை நிழல்தான் மூடிக்கிடக்கிறது. நான் உண்மையையே சொல்லுவேன். அதன் பிறகு..... அதன் பிறகு..... முடிவு எதுவாகவும் இருக்கலாம். அது அவர் எடுக்க வேண்டியது".

அவள் தன்னுடைய மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு தனக்குள்ளே ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

12

மன்மதராஜன் விமான நிலையத்தில் தன் நண்பன் ஒருவனை எதிர்பார்த்தே வந்து சேர்ந்தான். அவன் எதிர்பார்த்தது போல அவனுடைய நண்பன் அங்கு வரவில்லை. அந்த நண்பன் அவனோடு பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன். இப்போது கொழும்பில் உத்தியோகமாக இருப்பவன். அவன் அங்கு வராததற்கான காரணத்தை உணர்ந்து கொள்வதற்கு மன்மதராஜனுக்கு அதிக சிரமமிருக்கவில்லை.

ஆடிக் கலவரத்துடன் அகதியாகக் கப்பலேறி யாழ்ப்பாணம் சென்ற பலர் உயிருக்குப் பாதுகாப்பில்லாத சூழ்நிலையில் உத்தியோகத்தைப் பெரிதென மதித்துத் திரும்பி வரவே இல்லை என்ற செய்தியை அவன் அறிந்திருந்தான்.

விமான நிலையத்துக்குள்ளே இருந்து வெளியே வருவது மன்மதராஜனுக்கும் அச்சமாகவே இருந்தது. ஆனால் என்ன செய்வது! தான் பிறந்த சொந்த நாட்டிலேயே உயிர் ஆபத்தின்றி வாழமுடியாத அவல நிலையில் விமான நிலையத்திலிருந்து மீண்டும் சிங்கப்பூருக்கே போய்விட முடியுமா?

அவன் கொழும்பு நகரத்துக்குள்ளேயே புகுந்த போது எரிந்து சிதைந்து போய்க் கிடக்கும் கட்டடங்களின் கோரக் காட்சிகள் அவனுடைய நெஞ்சை உறுத்தின.

எவ்வளவு விரைவாகக் கொழும்பை விட்டு நீங்கி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட முடியுமோ! அவ்வளவு வேகமாக புறப்பட்டுவிட வேண்டுமென்று எண்ணிப் புகை வண்டியில் ஏறிப் பிரயாணத்தைத் தொடர்ந்தான்.

புகைவண்டி உரிய நேரத்துக்கு வந்து சேரத் தவறியதால் இரவு எட்டுமணிக்கு மேல்தான் கொடிகாமத்தை வந்தடைந்தது. அங்கிருந்து பருத்தித்துறை பஸ்ஸைப் பிடித்து தன்னுடைய ஊருக்கு வருவதற்குள் மேலும் ஒருமணி நேரம் கழிந்து போயிற்று.

அவன் பஸ்ஸிலிருந்து இறங்கி தோளில் ஒரு பாய்க்கும் இரண்டு கைகளிலும் கனமான சூட்கேஸ்களுமாகச் சுமந்து கொண்டு கிராமத்துக்குள்ளே இறங்கி மெல்ல ஆடி அசைந்த வண்ணம் நடக்க ஆரம்பித்தான். மண் ஒழுங்கைகளைத் தாண்டி அவனுக்குப் பழக்கப்பட்ட குறுக்குப் பாதையில் பனங் கூடல்களுக்கூடாக வந்து கொண்டிருந்தான். அந்தப் பனங் கூடல்களைக் கண்டபோதே தான் யாழ்ப்பாணத்து மண்ணில் நடந்து கொண்டிருப்பதான ஓர் உணர்வு அவன் நெஞ்சை நிறைத்தது. அந்த உணர்வைத் தொடர்ந்து "பனைமரத்தின் நிழலை நம்பாதே!" என்ற யாழ்ப்பாணத்து மண்ணுக்கே சொந்தமான பழமொழியொன்று அவன் நினைவுக்கு வந்தது. என்னுடைய வாழ்வும் பனைமரத்தின் நிழலை நம்பியது போலத்தான்?" என்னும் எண்ணமும் அவன் நெஞ்சில் எழுந்து அவனைத் துன்புறுத்த ஆரம்பிக்கவே அவன் வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்.

13

அன்றும் ஒரு புதன்கிழமை. ரீ.வி யில் தமிழ்ச் சினிமா ஒளிபரப்பப்படுகின்ற தினம்.

இரவு ஒன்பது மணிபோல மனோரதன் ரீ.வி பார்ப்பதற்கு வீட்டுக்கு வந்திருந்தான்.

அருந்ததி சில சமயங்களில் இப்போது ரீ.வி இல் சினிமா பார்ப்பதற்கு அவ்வளவாக விரும்புவதில்லை. ஆனால் அன்று கூடத்தில் அவளும் அமர்ந்து கொண்டாள்.

கணவனை இழந்து வாழ்வில் தவித்துக் கொண்டிருக்கும் ஒரு இளம் பெண்ணின் கதைதான் அன்றைய சினிமா.

அவளுக்கு தன்னுடைய வாழ்க்கையே ஒரு சினிமாக் கதையாகி ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருப்பதான ஒரு பிரமை நெஞ்சைத் தொடுகிறது.

இப்போது முன்னர் போலக் கண்ணீர் விட்டு அழுது அரற்றாமல், முகதில் ஒருவகை வச்சிர உறுதியுடன் எதனையும் எதிர்கொள்வதற்குத் தயாரான மனநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறவள் அவள்.

ஆனால் திரும்பவும் அவள் நெஞ்சம் இன்று குழம்பி, துயரம் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகி வந்து நெஞ்சை அடைக்கிறது. மன்மதராஜனின் நினைவுகள் மனதில் எழுந்து அவள் இதயத்தைக் கசக்கிப் பிழிகின்றன.

"அவருக்கும் எனக்கும் ஏனிந்தப் பிரிவு.....? இந்த இடைவெளி.....! இந்தத் துன்பங்களெல்லாம் எப்போது தீரப் போகின்றதுவோ..... அல்லது இப்படியே தீராமலே.....?"

அவளால் தன் மனதைக் கட்டுப்படுத்துவதற்கு முடியவில்லை.

அவள் தொடர்ந்து சினிமாவைப் பார்ப்பதற்கும் முடியாமல் குழம்பிக் கொண்டிருக்கும் மனதோடு மெல்ல எழுந்து அறைக்குள் வருகின்றாள். கூடத்தின் மெல்லிய இருளில் மனோரதன் தனித்துப் போயிருக்கின்றான்.ரீ.வி.இல் சினிமாக் காட்சிகள் விரிந்து கொண்டிருக்கின்றன.

அவன் பார்வை ரீ.வி இல் பதிந்திருப்பதுபோலத் தோன்றுகிறது. விழித்திரையில் அந்தக் காட்சிகள் வந்து பதியவே இல்லை. உள்ளத்தில் ஏதேதோ காட்சிகள் எல்லாம் வந்து வந்து போய்க் கொண்டிருந்தன. எல்லாமே ஊமைக்காட்சிகளாக நெஞ்சில் ஊருகின்றன.

வாழ்க்கையே ஊமைப்படங்கள் போல அவனுக்கு இப்பொழுது தோன்றுகின்றன. வாய் திறந்து பேசுவதற்கு இயலாத மோனம். நினைத்து நினைத்துப் பார்ப்பதிலேயே என்ன இன்பம்! மறுபுறம் இனம்புரியாத சுமையின் கனம் வந்து நெஞ்சில் உறுத்துகின்ற துயரம்.

அருந்ததி எழுந்து உள்ளே போகாமல் இருந்திருந்தால் இப்படி ஒரு தவிப்பு தனக்கு ஏற்பட்டிருக்காது என்று அவன் இப்போது நினைத்துக் கொண்டான். அவள் மீண்டும் திரும்பி வரவேண்டுமென்றே அவன் மனசு

விரும்பியது. அவள் வருவாள் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

ஒருவேளை அவள் போய்த் தன் கட்டிலின் மீது சாய்ந்து விட்டாளோ! அறையில் 'லயிற்' எரிந்து கொண்டிருக்கிறது. ஒளியிலா அவள் படுத்துக் கிடக்கின்றாள்.

அவள் மௌனம் இருளைப் போலத்தான். அந்த மௌன இருளில் எங்கே ஒளி இருக்கின்றது!

அவள் 'லயிற்றை' அணைத்திருந்தால் தான் எழுந்து போயிருக்கலாம். இப்போது.....?

அவனுக்கு இப்போது தனிமையில் தரித்திருக்க இயலவில்லை.

மெல்லக் கதிரையை விட்டு எழுந்தான். ஒரு கணம் தயங்கி, கதிரையை ஒரு கரத்தால் இறுகப் பிடித்து குழம்பி நின்றான். அடுத்த கணம் மெல்ல நடந்து அறைக் கதவுவரை வந்து உள்ளே நோக்குகின்றான்.

அருந்ததி கட்டிலுக்கு மேலே தொங்கும் மன்மதராஜனின் படத்துக்கு எதிரே நின்று, அந்தப் படத்தை நிமிர்ந்து நோக்கி தாரை தாரையாகக் கண்களால் வடித்துக் கொண்டு நிற்கின்றாள்.

மனோரதன் நெஞ்சம் துணுக்குற்றுப் போகின்றது. அவன் கண்களுக்கு அந்தக் காட்சியை நம்பவே முடியவில்லை. அவன் கால்கள் கூசுகின்றன. உள்ளே நுழைவதற்கு இயலாமல் அவை துவண்டு போகின்றன.

அவன் மனம் தளர்ந்து மீண்டும் கதிரையை நோக்கி வருகின்றான்.

ரீ.வி இல் சினிமா ஓடிக் கொண்டிருக்கின்றது. அவனுக்குச் சினிமாக் காட்சிகள் எரிச்சலை மூட்டுகின்றன.

அதை நிறுத்திவிட வேண்டும்போல நெஞ்சில் ஒரு வேகம் பிறக்கிறது.

அவன் பொறுமையாகக் காத்திருக்கின்றான், அருந்ததி திரும்பி வருவாள் என்று, அல்லது அறை 'லயிற்றை' அவள் அணைக்கவும் கூடும்.

காலம் நீண்டு கொண்டு போகின்றது. அவன் எதிர்பார்த்தது எதுவும் நடப்பதாக இல்லை. பொறுமை அவனைச் சோதிக்கின்றது. அந்தச் சோதனையில் கொஞ்சம் கொஞ்சமாக அவன் தோற்றுக் கொண்டே போனான். முற்றாகத் தோற்றுப் போன நிலையில் மீண்டும் இருக்கையை விட்டு எழுந்தான்.

மெல்ல நடந்து அறைக் கதவுவரை வந்து விட்டான்.

அருந்ததி இப்போதும் மன்மதராஜன் படத்துக்கு முன்நின்று.....

அவன் கால்களை எதுவோ ஒரு தளை இறுகப் பிணைக்கின்றது. அறையின் உள்ளே நுழைவதற்கு இயலாமல் அவை சோர்ந்து போகின்றன.

அவன் கரங்கள் சற்று மேலே உயர்ந்து பாதி மூடிக்கிடக்கும் கதவுச் சிறகை ஒரு கரம் பற்ற, கதவு நிலையை மறுகரம் இறுகப் பிடிக்க, வெறித்த பார்வை அருந்ததியின் கட்டுடல் மீது மேய.......

ரீ.வி இல் நிழற்படந்தான் ஓடிக் கொண்டிருக்கின்றது.

ஈழமுரசு
1984

அரும்பாகி.... மொட்டாகி... பூவாகி...





















## செல்வன் மகேந்திரராசா மயூரன்...

ஈழத்திருநாட்டின் யாழ்மாவட்டம் வடமராட்சிப் பிரிவிலுள்ள அல்வாய், ஸ்ரீமஹாலில் பிறந்து லண்டன் மாநகரிலுள்ள சவுத்ஹோஸ் பகுதியில் பிரஜாவுரிமை பெற்று வாழ்ந்து அகாலமரணமடைந்தவர். அன்னார் மகேந்திரராசா, ஸ்ரீநந்தனா தம்பதியரின் மூத்தமகன். மனோராஜ், மதிரதன், மனோஜன், நிதர்சன், சஞ்சிதா, சர்மிலன் ஆகியோரின் உடன்பிறப்பாவன். ஸ்ரீதரன்(முகாமையாளர்- மக்கள் வங்கி), பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் மருமகன். பாக்கியராஜா(மாலி), செல்வராசா, விநாயகராஜா ஆகியோரின் பெறாமகன்.

மயூரன் காலத்தின் கட்டாயத்தில் புலம்பெயர்ந்து லண்டன் சென்று வாழ்ந்தவன். குடும்பத்தின் ஏற்றமிகு வாழ்வுக்கு முழு ஒளி கொடுத்தவன். ஊர்ப்பொது விடயங்களுக்கெல்லாம் பொருளாகப் பணமாக அன்பளிப்புச் செய்து பெரும் பங்காளியாகத் திகழ்ந்தவன். ஊருக்கெல்லாம் உபகாரியாக மட்டுமன்றி உறவுகளையும் அடுத்தவர்களையும் அரவணைத்து அபயங்கொடுத்து ஆதரித்தவன், பயமறியாப் பாலகனாக, பகிடிக்கும் சாவறியா இளங்கன்றாகத்தான் வாழ்ந்த நகரில் துள்ளித் திரிந்தவன். மயூரனின் தோற்றம் இன்றும் அள்ளிப்பருகும், கிள்ளிக் கொஞ்சும் யௌவனப் பருவம். எத்தனையோ எதிர்பார்ப்புக்களின் மத்தியில் திடீரென ஏற்பட்ட மயூரனின் அகாலமரணம் சராசரியான ஒரு வாழ்வின் வெற்றிடமாக விளங்கினாலும் அவன் நினைவாக வெளிவரும் இந்த வெளியீடு அவனது நினைவழியாச் சுவடாக அமைந்துள்ளது. அவன் பெயரை இன்றுள்ள இலக்கிய உலகில் நினைப்பதற்கும், புலம் பெயர்ந்த ஏனைய பகுதிகளுக்கும் இது சுமந்து செல்வதாகவும் அமைகிறது.

ராஜபவன்,
அல்வாய்.

**செ.சதானந்தன்** J.P
(ஓய்வுபெற்ற அதிபர்)

கிராமத்தில் பிறந்து
கிராம மத்தியிலேயே தொழில் புரிந்து.
கிராம மண்ணோடேயே புரண்டு
வாழ்வு நடத்திக் கொண்டிருக்கும்
இவரது படைப்புக்களில்
கிராமப் பகுதிகளுக்கே உரித்தான
அம்சங்கள் எல்லாமே
பரவிக் கிடக்கும்.
கிராமப்புற மனிதனின் இருதயத்தையே
தமது படைப்புக்கள் மூலம்
ஈழத்து வாசகனுக்கும்
தமிழகத்து வாசகனுக்கும்
தந்துள்ள தெணியான் அவர்கள்
அமைதி நிறைந்த கிராமத்து மண்ணிலே
காலத்தின் கோலத்தால்
கால் ஊன்றப் பார்க்கும்
வேறோர் வாழ்வின் சீரழிவினை
'பனையின் நிழல்' என்ற
நாவலுக்கூடாகத்
தொட்டுக் காட்ட முற்படுகின்றார்.

கே. டானியல்

மதுரன் கிரா(f)பிக்ஸ் & ஓவ்செறய் பிறின்ரேர்ஸ் - அல்வாய்
T.P 021 2263099, 0776688318